1

# புரொபசர்
# ரெங்காவின் அரசியல்

28 OCT 1945

தெலுங்கில் எழுதியவர்:
**தோழர் ஸி. வாஸு,**
ஆந்திர விவசாயிகள் தலைவர்

மொழிபெயர்ப்பு:
**தோழர் மணலி கந்தசாமி,**
தமிழ்நாடு கிஸான் சபா உதவிக் காரியதரிசி.

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்,**
1/6, டேவிட்ஸன் வீதி,
ஜி. டி., சென்னை.

செப்டம்பர், 1945]　　　　[விலை 4 அணா.

2

W.216'N43
NH5

Janasakti Press Q: H. M. S. 374
for Tamilnad Kisan Saba, Paper issue Card No. Q. H. M. S. 434
19th Sep., 1945, 1000 Copies.

TAMIL NADU ARCHIVES LIBRARY
112596
MADRAS

# முன்னுரை

ஆந்திர ரயத்து சங்கத்தின் தலைவர்களில் ஒருவரான தோழர் ஸி. வாஸு எழுதிய 'ரெங்காவின் அரசியல்' என்ற சிறு புத்தகத்தை இந்த வெளியீட்டில் மொழிபெயர்த்துத் தருகிறோம். ஆந்திர விவசாயிகளுக்கு அரும்பெரும் தொண்டாற்றி அவர்களின் நம்பிக்கைக்கும் அன்பிற்கும் பாத்திரமாகி யிருப்பவர் தோழர் வாஸு. 1944 மார்ச்சு மாதம் பெஜவாடாவில் நடந்த அகில இந்திய கிஸான் சபையின் எட்டாவது மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவராயிருந்தார்.

1923-ம் வருஷத்திலிருந்து ஆந்திர தேச அரசியலில், பேராசிரியர் ரெங்கா அனுஷ்டித்துவரும் சந்தர்ப்பவாத கொள்கையை இந்த வெளியீடு விளக்குகிறது.

சிறையிலிருந்து வெளிவந்ததிலிருந்து ஸ்ரீ. ரெங்கா அகில இந்திய கிஸான் சபைக்கு எதிராகப் போட்டி ஸ்தாபனங்கள் அமைக்க முயற்சித்து வருகிறார். இதில் சில காங்கிரஸ்காரர்களின் கம்யூனிஸ்டு எதிர்ப்பு மனப்பான்மையை பயன்படுத்தி வருகிறார். வளர்ந்துவரும், தமிழ்நாடு கிஸான் இயக்கத்தை நம் மாகாணத்திலுள்ள கம்யூனிஸ்டு விரோதிகளின் உதவியுடன் பிளவுபடுத்த பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்.

ஸ்ரீ ரெங்காவின் வண்டவாளத்தை தெரிந்துகொள்ளவும் அவரது வலையில் விழாமலிருக்கவும், தமிழ்நாடு விவசாயிகளின் ஒரே பொதுஜன ஸ்தாபனமான தமிழ்நாடு கிஸான் சபையைப் பிளவுபடுத்தும் சூழ்ச்சிகளில் விழாமலிருக்க இந்த சிறு வெளியீட்டை ஒவ்வொரு தேசபக்தரும் படிக்க வேண்டும்.

பி. ஸ்ரீனிவாச ராவ்,
தமிழ்நாடு கிஸான் சபா பொதுக்காரியதரிசி.

# பொருளடக்கம்


(1) ரெங்காவின் காங்கிரஸ் எதிர்ப்பு நடவடிக்கைகள்

(2) யுத்தத்துக்கு முன் ரெங்காவின் அரசியல்

(3) ஆகஸ்டு கலவரங்களும், ரெங்காவும்

(4) ரெங்கா கோஷ்டியின் பிளவு சூழ்ச்சிகள்

(5) கிஸான் சபைகள்: காந்திஜி-ரெங்கா சம்பாஷணை

(6) உணவுப் பிரச்சினை — ரெங்கா கோஷங்களின் வண்டவாளம்.

# ரெங்காவின் அரசியல்

•••••••••••

## ரெங்காவின் காங்கிரஸ் எதிர்ப்பு நடவடிக்கைகள்

சீமையிலிருந்து திரும்பி வந்த ரெங்கா தன் அரசியல் வாழ்வை துவக்கினார். ஆந்திராவில் விவசாயத் தொழிலாளிகள் சங்கங்களையும், கிஸான் சபாக்களையும் ஆரம்பித்தார். தொழிலாளிகள்-விவசாயிகளுக்கு சட்ட சபைகளில் போதுமான பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு இவைகளை வைத்துக்கொண்டு ஒரு தனி அரசியல் கட்சியை ஸ்தாபிக்க விரும்பினார். காங்கிரஸ், ஜஸ்டிஸ் கட்சிகளும், பிரிட்டிஷ் அரசாங்கமும், நிலச்சுவான்கள்-முதலாளிகளின் நலன்களைத்தான் பாதுகாக்கிறதென்றும், தொழிலாளிகள் விவசாயிகளுக்கு எவ்வித நன்மையும் செய்யவில்லை என்றும் பறைசாற்றி அதற்காகக் குடியானவர்கள்-தொழிலாளிகள் நன்மையைப் பாதுகாக்க ஒரு தனி அரசியல் கட்சியைத்தானே ஸ்தாபிக்கவேண்டியிருக்கிறதென்று கூறினார். "ரெங்காவும்—மார்க்ஸிசமும்" என்ற தன்புத்தகத்தில் (பக். 2) இந்த அரசியல் கட்சியின் அவசியத்தைப் பற்றி எழுதுவதாவது: "1923ல் ரெங்கா கிஸான் சபைகளையும் விவசாயத் தொழிலாளிகள் சங்கங்களையும் ஆரம்பிக்க முயற்சி செய்தார். ஜனங்கள், காங்கிரசுடனே, ஜஸ்டிஸ் கட்சியுடனே, பிரிட்டிஷ் அரசாங்கத்துடனே தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது; ஏனெனில் அவைகள் நிலச்சுவான்—முதலாளிகள் நலன்களைப் பாதுகாக்க நிறுவப்பட்டவை. ஆகவே ஜனங்களின் கிஸான்-மஸ்தூர் ராஜ்யத்தை ஸ்தாபிக்க ஒரு தனி அரசியல் கட்சி ஏற்படவேண்டிய அவசிய மேற்பட்டிருக்கிறது. இவ்வளவு முன்னதாகவே (1923) ரெங்கா இம்மாதிரியான யோசனையைக் கொடுக்க முடிந்ததானது ஒரு நம்பிக்கைக்குரிய சூசகமே."

அப்படி ஒரு புது அரசியல் கட்சியை ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தும்போது அவர் ஜஸ்டிஸ் கட்சியுடனும் பிரிட்டிஷ் அரசாங்கத்துடனும் ஜனங்களுக்கு எவ்வித சம்பந்தமும் கூடாது என்பதோடு மாத்திரமல்லாமல் தேசிய காங்கிரசுடனும்

எவ்விதத் தொடர்பும் கூடாது என்று கூறியிருக்கிறார். அவருடைய அபிப்பிராயம் கிஸான் சபை தன் வர்க்க நலன்களை விட்டுக் கொடுக்காமல் காங்கிரசுடன் ஒத்துழைப்பது என்பதுகூட இல்லை; ஆனால், காங்கிரசுக்கு நேர் விரோதமாக வேலை செய்ய வேண்டும் என்பதுதான். ரெங்காவின் அரசியல் வாழ்வின் ஆரம்பமே காங்கிரஸ் எதிர்ப்பில் தான் என்பது விளங்கும். ஆகவே அப்போதே ரெங்கா நடவடிக்கைகளில் காங்கிரஸ்காரர்களுக்கு சந்தேகமிருந்தது; பின்பு உண்மை வெளிப்பட்டதும் அவர்கள் அவரை எதிர்க்கவும் செய்தார்கள். ரெங்காவே தன் புத்தகத்தில் (பக்கம் 3) குறிப்பிட்டிருக்கிறார். "கிஸான் இயக்கத்தின் வளர்ச்சியைக் காங்கிரசால் தடுக்க முடிந்தது. கிருஷ்ணு, குண்டூர் ஜில்லாக்களில் காங்கிரஸ், ஜஸ்டிஸ் கட்சிகளும், கவர்ன்மெண்டும் பழக்கமான இடைஞ்சல்களைத் தனக்கு செய்தபோதிலும் விவசாயிகளும், தொழிலாளிகளும் தங்களுக்குத் தனியான வர்க்க ஸ்தாபனங்கள் வேண்டுமென்ற அவசியத்தை உணராதிருந்த போதிலும் ரெங்கா தன் முயற்சியில் முன்னேறினர்".

இதிலிருந்து கிஸான் சபாக்களையும், விவசாயத் தொழிலாளிகள் ஸ்தாபனங்களையும் ஆரம்பித்த ரெங்காவின் முயற்சிகளை காங்கிரஸ் அடியோடு எதிர்த்தது என்பது நன்கு தெரிகிறது. தனியாக ஒரு அரசியல் கட்சியை ஆரம்பிக்க முயல்வது காங்கிரசுக்கும், கிஸான்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை, நிலச்சுவான்கள், முதலாளிகள் இவர்களின் நலனைப் பாதுகாக்கத்தான் காங்கிரஸ் இருக்கிறது என்று பிரலாபிப்பது. இவைகளைப்பற்றி காங்கிரஸ்காரர்கள், 1923ல் நடந்த சட்ட சபைத் தேர்தல்களில் தனக்குக் காங்கிரஸ் டிக்கெட் கிடைக்காது என்ற காரணத்தால், ரெங்காவின் தேர்தல் சூழ்ச்சி என்று கருதியது இயற்கையே. காங்கிரசுக்குப் போட்டி அரசியல் ஸ்தாபனத்தை ஏற்படுத்தும் போது அவர்கள் வேறென்ன செய்ய முடியும். அதனால் தான் அவர்கள் ரெங்காவின் காங்கிரஸ் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இடங்கொடுக்கவில்லை.

அந்தக் காலங்களில் காங்கிரஸ்காரர்கள் மாத்திரமல்ல; கிசான்களே ரெங்காவின் போக்கில் சந்தேகப்பட்டார்கள். ரெங்கா விவசாயத் தொழிலாளிகளையும் ஒன்று சேர்த்துத் தங்களை எதிர்க்கத் திட்டம் போடுகிறார் என்று கிஸான்கள் நினைத்தனர்; ஏனென்றால் ரெங்காவின் திட்டங்கள் கிஸான்களுக்கும், விவசாயத் தொழிலாளிகளுக்குமிடையே நல்லெண்ணத்தை வளர்ப்பதாயில்லை. ஜஸ்டிஸ் கட்சிக்குக் கிஸான்களிடம் செல்வாக்கிருந்ததால் விவசாயத் தொழிலாளர்களை கிஸான்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டு விவசாயத் தொழிலாளிகளின் வோட்டைப் பெற்று

தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியைத் தோற்கடிக்கலாம் என்று நினைத்தார். ஆனால் அவர் நினைத்ததற்கு எதிராக நிலைமை மாறிவிட்டது தான் பரிதாபம். கிஸான்கள் ரெங்காவை எதிர்த்தார்கள்; விவசாயத் தொழிலாளிகளோ ஆதரிக்கவில்லை. அவர்கள் எப்படி ரெங்காவின் ஏக வெளிப் பாதையில் நம்பி இறங்கமுடியும். அவரின் சுய நல வேட்டைக்குத் தங்கள் நலன்களைப் பலிகொடுக்க முடியும்.

விவசாயத் தொழிலாளிகள் சங்கம் ஆரம்பிக்க முயற்சித்த கதை இப்படியாக முடிவுற்றது. பிறகு 1932-ல் கம்யூனிஸ்டுகள் விவசாயத் தொழிலாளிகள் சங்கங்களை ஸ்தாபித்தபோது கம்யூனிஸ்டுகளைப்பற்றி தப்புப் பிரச்சாரங்களைப் பரப்பினர். எப்படி 1923-ல் தேர்தலில் வெற்றிபெற விவசாயத் தொழிலாளிகளைக் கிஸான்களுக்கு எதிராகச் சண்டை போடத் தூண்டினரோ, அதைப்போலவே கிஸான்களிடையே கம்யூனிஸ்டுகளதுசெல்வாக்கைத் தடுக்க "கிஸான்களை எதிர்க்க கம்யூனிஸ்டுகள் விவசாயத் தொழிலாளிகளை திரட்டுகிறார்கள்" என்று கிஸான்களிடம் தப்புப் பிரச்சாரம் செய்து பார்த்தார். கம்யூனிஸ்டுகள் தங்களின் சுய நல மற்ற சேவையினால் கிஸான்களிடமும், விவசாயக் கூலிகளிடமும் நல்லெண்ணத்தை வளர்ப்பதற்குப் பாடுபட்டதினால் இருதரப்பாரின் நம்பிக்கையையும் பெற்றார்கள். ரெங்கா உடனே சுதியை மாற்றிக்கொண்டார். தானும் விவசாயத் தொழிலாளிகள் சங்கத்தை ஆதரிப்பதாகக் கூறி 1937ல் ஏற்கனவே வேலை செய்துவரும் சங்கங்களில் ஒத்துழைக்காமல் "தென்னிந்திய தொழிலாளி-விவசாயி சம்மேளனம்" என்ற ஒரு போட்டி ஸ்தாபனத்தை கடிதாசியில் ஆரம்பித்தார்.

## காங்கிரஸ் ராஜினமா, ரெங்கா அசெம்பிளிப் பிரவேசம்

அரசாங்கம் சுதந்திரக் கோரிக்கையை மறுத்ததால் காங்கிரஸ் போராட்டத்துக்கு தயாரானது. டண்டி யாத்திரைக்குக் காந்திஜி ஆயத்தம் செய்தார். 1930-ம் பிப்ரவரி 15க்குள் தங்கள் பதவிகளை ராஜீனமா செய்ய வேண்டுமென்று பண்டித மோதிலால் நேரு அசெம்பிளி சுயராஜ்யக் கட்சிக்கு தாக்கீது விடுத்தார். பிரகாசமும் இதர காங்கிரஸ்காரர்களுடன் ராஜினமா செய்தார். சத்தியாக்கிரக இயக்கத்துக்கு எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன. சந்தர்ப்பத்தை விடுவாரா ஆசிரியர் ரெங்கா. பிரகாசம் காலி செய்த ஸ்தானத்தைப் பூர்த்தி செய்தார். உப தேர்தலில் தன் நீடித்த எண்ணத்தையும் பூர்த்திசெய்து கொண்டார். சந்தர்ப்பவாதிகள் தங்களைப்பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றி எப்போதும் கவலைப்படுவதில்லை.

கிடைத்த சந்தர்ப்பத்தை எப்படியும் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்பதுதான் அவர்களின் நோக்கம்.

இத்துடன் நிற்கவில்லை ரெங்காவின் சுயநலம். 1930 இறுதியில், மத்தியிலும், மகாணங்களிலும் தேர்தல்களை அரசாங்கம் நடத்திற்று. அதன் மூலம் சட்ட சபைகளை காங்கிரஸ் விரோதிகளாகிய தங்கள் குலாம்களைக் கொண்டு நிரப்பி தங்களின் அவசரச் சட்ட ஆட்சியையே ஜனங்களின் ஆட்சியாகக் காட்டி விடலாமென்று அரசாங்கம் திட்டம் போட்டது. இத்திட்டத்தைத் தோற்கடிக்க காங்கிரஸ் தேர்தலில் கலந்து கொள்வதில்லையென்றும், ஜனங்கள் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டு மென்றும், ஒத்துழையாமை இயக்கத்தை வலுப்படுத்த வேண்டுமென்றும் அறிவித்தது. நமது பேராசிரியர் இச்சந்தர்ப்பத்தையும் விட்டாரில்லை. தன்னுடைய பழைய செய்கைக்கு வருந்தாமலிருப்பது ஒரு புறமிருக்க, இரண்டு தொகுதிகளில் கோதாவரி, குண்டூர், நெல்லூர், கிருஷ்ணா ஜில்லாக்களில் தனது அபேக்ஷாபத்திரத்தைத் தாக்கல் செய்து விட்டார். பிறகு திடீரென்று கிருஷ்ணா, கோதாவரி தொகுதியில் தனது அபேக்ஷையை வாபஸ் செய்தது அவரை அந்தத் தொகுதியில் நிற்கத் தூண்டிய நண்பர்களுக்கே பெரிய மர்மமாயிருந்தது மன்னியில் கோபமேற்படும்படியும் செய்தது. அவருக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையுள்ள தொகுதியில் நண்பர்களைக் கூடக் கலக்காமல் திடீரென்று வாபஸ் செய்ததில் ஒரு ரகசியம் உண்டு. அவருக்கும், ஜஸ்டிஸ் கட்சிப் பிரதிநிதி மோத்தி நரசிம்ம ராவுக்குமிடையே ஏதோ ரகசிய பேரம் ஏற்பட்டது. அந்த ரகசிய பேரத்தின் விபரம் ரெங்காவுக்கு மாத்திரம்தான் தெரியும்.

## லண்டன் பிரயாணம்

அசெம்பிளி தேர்தல்களில் ரெங்கா தோல்வியுற்றார். கோவிந்த ரெட்டி என்பவர் ஜெயித்தார். தேர்தலில் போட்டியிட்டதின் காரணமாகக் காங்கிரஸ் கொள்கைகளை உதாசீனம் செய்த புண்ணியத்தையும் கட்டிக் கொண்டார். இவைகளுக்கெல்லாம் பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டுமே; அதற்கும் சளைத்தாரில்லை. இந்தியாவில் வருங்கால அரசியலைத் தயாரிக்க 1930ல் அரசாங்கம் லண்டனில் முதல் வட்டமேஜை மகாநாடு நடத்தியது. காங்கிரஸ் அதை பகிஷ்கரித்தது; மற்ற தேசிய வாதிகளும் அழைப்பை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொண்டது. காங்கிரசுக் கெதிராக அரசாங்கம் நடத்தும் தப்புப் பிரசாரத்தை எதிர்ப்பதற்கு லண்டன் செல்ல நிச்சயித்தார் ரெங்கா. இதன் மூலம் இதுவரை காங்கிரசை எதிர்த்த பாபத்தை விமோச

னம் செய்து கொள்ள விரும்பினார். அவர் எண்ணம் எப்படி இருந்தபோதிலும் லண்டனில் காங்கிரசின் கோரிக்கைகளை எடுத்துரைத்தார். திரும்பியவுடன் ரீசெட்டில்மெண்டு வரிச் சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்று கோரியதற்காகச் சிறையிலிடப்பட்டார்.

---

# யுத்தத்திற்கு முன் ரெங்காவின் அரசியல்

சட்ட மறுப்பு சம்பந்தமாக 1930-33ல் சிறை சென்ற காங்கிரஸ் ஊழியர்களிடையே சோஷலிச எண்ணங்கள் பரவ ஆரம்பித்தது. 1934-ல் வெளி வந்த உடனே இந்தியா பூராவும் காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியை ஏற்படுத்தப் பெரு முயற்சி நடந்தது. அப்போது 1934-ல் ஆந்திராவில் காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சி ஸ்தாபகர்களில் ரெங்காவும் ஒருவர்.

1934ல் அக்கட்சியின் ஆந்திர மாகாணத் தலைவராகக் கூட இருந்தார். இங்கும் அவருடைய சந்தர்ப்பவாத எண்ணங்கள் காரணமாக ஒரு வருஷத்துக்கு மேலிருக்க முடியவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் சோஷலிச எண்ணங்களும், தீவிர அபிப்பிராயங்களும் காங்கிரஸ் ஊழியர்களிடம் பரவிவந்தன. அந்த ஊழியர்களின் நல்லெண்ணத்தை சம்பாதிக்க வேண்டுமானால் ரெங்காவும் சோஷலிஸ்டு முகமூடியைப் போட்டுக்கொள்ள வேண்டும்; காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சி தலைவராயிருப்பது அவருக்கு மிகவும் பிரயோசனகரமா யிருக்கும். அப்படி இருப்பதின் மூலம் காங்கிரஸ் கமிட்டிகளிலும் அசெம்பிளியிலும் முக்கிய பதவிகள் கிடைக்கும் நிச்சயம் இருக்கிறது. இவைகளுக்கெல்லாம் காங்கிரஸ் ஊழியர்களது ஆதரவு வேண்டும். ஆகவே காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவரானார்.

ஆனால், 1934 மே மாதத்தில் காங்கிரஸ் தனது ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டு பாட்னாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் சட்ட சபை வேலைகளை மேற்கொள்ள நிச்சயித்தது. அரசாங்கத்தை சட்ட சபைகளுக்குள்ளேயே எதிர்க்க முடிவுசெய்து மத்திய அசெம்பிளி தேர்தல்களில் போட்டியிட்டது. காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சி இதை எதிர்த்து விவசாயிகள்-தொழிலாளிகள் உதவிகொண்டு அடிமை இந்திய அரசாங்கச் சட்டத்தைக் காங்கிரஸ் எதிர்க்க வேண்டுமென்று கோரியது. எந்த காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சி அங்கத்தினரும்

சட்ட சபை நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது, பொதுஜனப் போராட்டத்துக்குத் தயார் செய்ய வேலை செய்ய வேண்டும் என்று திட்ட மிட்டது.

இத்தீர்மானம் ரெங்காவின் அசெம்பிளிப் பிரவேசத்துக்கு இடைஞ்சலா யிருந்தது. உடனே காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சி தலைமையிலிருந்தும் கட்சியிலிருந்தும் தயக்கமன்னியில் ராஜி னுமா செய்தார். அவருக்கு உண்மையாகவே தீர்மானத்தின் பேரில் அபிப்பிராய பேத மேற்பட்டிருந்தால் அதை வற்புறுத்தி மற்றவர்களை ஒப்புக்கொள்ளச் செய்யவும், கக்ஷிக் காங்கிரசில் தன் கக்ஷியை விளக்கித் தீர்மானத்தை மாற்றவும் முயற்சி எடுத் திருக்கவேண்டும். இம்மாதிரி ஒன்றும் செய்யாமல் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட உடனே திடீரென்று ஏன் ராஜிநாமா செய் தார்? சட்ட சபைப் பதவிகளுக்கான சந்தர்ப்பத்தைத் தனக்கு ஏற்படுத்திக் கொள்ளவும், தன் சந்தர்ப்பவாதி எண்ணங்களைப் பூர்த்தி செய்துகொள்ளவு மல்லாது வேறு என்ன இருக்க முடியும்?

## காங்கிரசுக் கெதிராகப் போட்டி கிஸான் சபைகள்

எப்படி 1922-29ல் அதாவது ரெங்கா காங்கிரசுக்குள் வருவ வற்கு முன் காங்கிரசுக்கு எதிராக போட்டிக் கிஸான் சபைகள் ஏற்படுத்தினர் என்பது எடுத்துக் காட்டப்பட்டது. சமீபத்தில் தான் காந்திஜியிடம் கிஸான் சபாக்கள் 1929 வரையில் காங்கிர சுக்கு எதிராக வேலை செய்ததென்றும் பிறகு 1942 ஆகஸ்டு வரை யில் காங்கிரசுடன் ஒத்துழைத்த தென்றும் ஒப்புக்கொண்டிருக்கி றார். ஆனல் ஆகஸ்டு தினங்களிலிருந்து கம்யூனிஸ்டுகள் கிஸான் சபாவை காங்கிரசுக்கு விரோதமாகப் பயன் படுத்திக்கொண்டிருக் கிறார்களென்றும், ஆகவே, காங்கிரசின் தலைமையில்தான் ஆரம் பிக்க விருக்கும் கிஸான் காங்கிரசுக்கு—காந்திஜி ஆசீர்வாத மளிக்கவேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்.

ஆனல், இது உண்மையல்ல. 1929க்குப் பிறகு அவர் காங் கிரசை பட்டவர்த்தனமாக எதிர்க்கவில்லை யென்றால் அதற்குக் காரணம் அவரால் அது சாத்தியமாகவில்லை. காங்கிரஸ் பூராவி லும் நகரமக்கள் புகுந்துவிட்டார்கள். கிராம விவசாயிகள் கிஸான் சபைகளில் சேருவதின் மூலம் கட்டுப்பாடாய் காங்கிரஸை கைப் பற்ற வேண்டும் என்றுதான் பிரசாரம் செய்து வந்தார். கிஸான் சபாவில் தன் செல்வாக்கைப் பெருக்கி காங்கிரசின் தலைமைப்பதவியைக் கைப்பற்றுவதுதான் அவர் நோக்கமெல் லாம். கம்யூனிஸ்டுகள்தான் கிஸான் சபா, தொழிற் சங்கக் காங்கிரஸ், மாணவர்சம் மேளனம், பாலர்சங்கம் இவைகளிடையே

ஒற்றுமையை பலப்படுத்தி காங்கிரசின் லக்ஷியமாகிய சுதந்திரத்துக்குப் போராடப் பாடுபட்டார்கள். இதற்கு நேர்மாறாக ரங்காவின் போக்குகாங்கிரசைக் கைப்பற்றுவதற்கு கிஸான் சபைகளை உபயோகிப்பதிலேயே சென்றது. ஆனால் கிஸான் இயக்கம் எச்சந்தர்ப்பத்திலும் இவரது சுய நலத்துக்கு இடம் தரவில்லை. 1929-லேயே காங்கிரசைக் கைப்பற்றுவதை விட்டு விட்டதாகக் கூறுகிற இதே ரெங்கா 1938ல் எழுதி இருப்பதைப் பாருங்கள்: "காங்கிரஸ் மந்திரி சபைகள் ஜனங்களுக்கு எல்லா நன்மைகளும் செய்யும் என்று நினைப்பது தவறு. காங்கிரசின் தற்காலத் தலைமைப் பதவியை நீக்கியாக வேண்டும், காங்கிரசின் லக்ஷியத்தையும் திட்டங்களையும் மாற்ற வேண்டும். இவைகளைப் பூர்த்தி செய்ய நாம் பொது மக்களிடம் தொடர்பு வைத்துக்கொண்டு அவர்களிடமுள்ள புரட்சி சக்தியையும் அரசியல் சக்தியையும் கிளறி விட வேண்டும். அதோடு காங்கிரஸ் கமிட்டிகளையும் கைப்பற்ற முயற்சிக்கவேண்டும். இன்றிருக்கும் காங்கிரஸ் நிர்வாகத் தலைவர்களோ வர்க்க உணர்ச்சிபெற்ற கிஸான்கள் காங்கிரசுக்குள் பொறுப்புள்ள ஸ்தானங்களைக் கைப்பற்ற முடியாதபடி முடிந்த வரையில் தடை செய்கிறார்கள். அந்தத் தலைமைப் பதவியின் பேரிலும் காங்கிரசின் கொள்கைகள்-திட்டங்களின் பேரிலும் நமது 'செல்வாக்கும்' நிர்ப்பந்தமும் ஏற்படுத்த நாம் புது வழிகளையும், யுக்திகளையும், திடத்துடன் கையாள வேண்டும்".

1938-ல் "கிஸான்களும் காங்கிரசும்" என்ற தன் புத்தகத்தில் (பக்கம் 35) இம்மாதிரி எழுதியபோது, "திடத்துடன் நாம் புது வழிகளையும் யுக்திகளையும் கையாளவேண்டும்" என்பதின் அர்த்தம் கிஸான் சபைகளின் பலத்தின் மூலமாக காங்கிரஸ் கமிட்டிகளைக் கைப்பற்றவேண்டும் என்பதல்லாமல் வேறென்ன? 1929லேயே இம்மாதிரி எண்ணங்களை விட்டுவிட்டேன் என்று அவர் யோக்கியப் பொறுப்பாய் சாதிப்பதை யார் நம்ப முடியும். இதை மீண்டும் கூறுவராகில் அவர் காந்திஜியையும் மக்களையும் ஏமாற்றுவதல்லாமல் வேறொன்றுமில்லை.

ரெங்கா தனது காங்கிரஸ் எதிர்ப்புப் போக்கை அனுஷ்டித்த போது அகில இந்திய கிஸான் இயக்கமும் அதன் கிளையாகிய ஆந்திர மாகாண கிஸான் சபாவும் என்ன செய்துகொண்டிருந்த தென்பதைப் பார்ப்போம். 1935லிருந்து அ. இ. கிஸான் சபாவும் ஆந்திர மாகாண கிஸான் சபாவும் தனி வர்க்க ஸ்தாபனமாக வளர்ந்து வந்ததோடல்லாமல் தேசீய இயக்கத்தையும் காங்கிரசையும் பலப்படுத்தி வந்தது. அவைகள் என்றுமே காங்கிரசை எதிர்ப்பது, கைப்பற்றுவது என்ற ரெங்காவின் கொள்கையை ஒப்புக்கொள்ளவில்லை. எல்லா வர்க்க ஸ்தாபனங்கள், பொது

ஜன இயக்கங்கள் இவைகளின் லட்சியம் சுதந்திரப் பாதையில் செல்லும் தேசிய இயக்கத்தைப் பலப்படுத்துவதுதான் அவைகளின் லட்சியம். என்றைக்குமே காங்கிரசை பலஹீனப்படுத்துவதாகவோ அல்லது அதற்காகப் போட்டி கிஸான் சபாக்களை வலுப்படுத்துவதாகவோ இருந்ததில்லை. தேசிய இயக்கத்தை விரிவுபடுத்தவும் தேசத்தின் பூரா கிஸான் ஜனத்தொகையும் சுதந்திரப்போராட்டத்தில் கலந்து அதைப் பலப்படுத்தவுந்தான் கிசான் இயக்கம் பாடுபடுகிறது. கிசான்களின் தினசரித் தேவைகளைப் பூர்த்தி செய்ய நிலச்சுவான்தார், முதலாளி, ஜமீன்தார், கள்ளமார்க்கெட்காரன், லஞ்சம் வாங்கும் அதிகாரவர்க்கம் இவர்களின் நெருக்குதலை எதிர்த்தும் போராடிவருகிறது. இந்தப் போராட்டத்தில் காங்கிரசின் உதவியை நாடி அதன்மூலம் காங்கிரஸ்-கிசான் சபா ஒற்றுமையை வலுப்படுத்துகிறது கிசான்சபா. தன் தினசரித் தேவைகளுக்குப் போராடக் கிசான் இயக்கத்தை வலுப்படுத்த கிசான் சபா வெகுபாடுபட்டிருக்கிறது. அத்துடன் தன் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக நடத்தும் போராட்டம் சுயராஜ்யத்துக்காக காங்கிரஸ் நடத்தும் போராட்டத்துடன் எப்படி இணைந்திருக்கிறது என்பதையும் கிசான்களுக்குப் புரியும்படி செய்திருக்கிறது. நிலச்சுவான்தாரனை எதிர்த்து நடத்தும் போராட்டத்தினின்றும் ஏற்பட்ட இந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விழிப்பு கிஸானை முழு மூச்சுடன் காங்கிரஸ் இயக்கத்தில் பங்கெடுத்துக்கொள்ளச் செய்கிறது. இம்மாதிரி கிசான் இயக்கம் காங்கிரஸ் போகும் அதே பாதையில் திரும்பப்பட்டு அதன்மூலம் தேசிய இயக்கம் வலுவடைகிறது.

கிசான்களின் பரிபூர்ண ஒத்துழைப்பு காங்கிரஸின் சுதந்திர லட்சியத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று காங்கிரஸ்காரர்களைப் புரிந்துகொள்ளச்செய்ய கிஸான்சபா வெகுவாக முயன்றிருக்கிறது. இவைகளின் காரணமாகக் கிஸான் இயக்கமும் இதர பொதுஜன இயக்கங்களும் காங்கிரசுடன் இணைந்து வேலை செய்ததின் காரணமாக இந்த ஸ்தாபனங்களுக்கிடையே ஐக்கியம் வளர்ந்திருக்கிறது. இம்மாதிரி காங்கிரஸ் தன் செல்வாக்கை விரிவாக்கவும், மாபெரும் இயக்கமாக வளரவும் முடிந்தது. காங்கிரஸ் ஒரு பரந்த சுதந்திர இயக்கமாக வளருவதற்கு உதவி செய்வதற்குப் பதிலாக கிசான் இயக்கம் ரெங்காவின் சமயோசிதப் பிளவுக் கொள்கையை அனுஷ்டித்திருந்தால் யுத்தத்துக்கு முன்பாக தேசிய இயக்கத்துக்கு எவ்வளவு தீங்கு நேரிட்டிருக்கும். யுத்தகாலத்துக்கு முன் காங்கிரசுக்கும் இதர பொதுஜன இயக்கங்களுக்குமிடையே ஏற்பட்ட ஐக்கியம் சிதறியிருக்கும். நமது தேசிய இயக்கத்துக்குள்ளேயே மகத்தான

பிளவுகள் தோன்றி இருக்கும். காங்கிரஸ் பலஹீனப்பட்டிருந்தால் மற்ற பொதுஜன இயக்கங்கள் சின்னுபின்னமாகியிருக்கும். ரெங்காவைப் போன்ற சிலருக்கு எது எப்படிப்போனாலும் சில பதவிகள் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், சுதந்திரதாகம் மேலிட்டவர்களுக்குப் பெரிய ஹானியை விளைவித்திருக்கும். அதிர்ஷ்டவசமாக கிஸான் இயக்கமானது ரெங்காவைத் தன் போக்கில் காரியங்கள் செய்ய இடந்தரவில்லை.

## முன்னேற்றக் கட்சியும், ரெங்காவும்

திரிபுரி காங்கிரசுக்குப் பிறகு சுபாஷ்போஸ் தன் முன்னேற்றக் கட்சியை ஸ்தாபித்தபொழுது ரெங்கா தன் கோஷ்டியை அதனுடன் இணைத்தார். அதற்கும் முக்கியமான காரணம் கிசான் சபாவின் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு காங்கிரஸ் கமிட்டிகளைக் கைப்பற்ற வேண்டுமென்பதுதான். போஸ் ஒரு புது காங்கிரஸ் தலைமைப் பதவியை ஸ்தாபிக்க முயற்சித்தபொழுது அந்த அதிகாரத்தைப் பங்குபோட்டுக் கொள்ள நமது ரெங்காவும் தயங்கவில்லை. முன்னேற்றக்கட்சியில் சரியான பதவியைக் கைப்பற்றுவதின்மூலம் புதிய தலைமை பதவியிலும் தனக்குப் பொறுப்புள்ள அதிகாரம் கொடுக்கப்படும் என்று நினைத்தார். ஆகவே முதலில் தனது கோஷ்டியை முன்னேற்றக் கட்சிக்குள் நுழைத்துவிட்டு தான் மாத்திரம் மதில்மேல் பூனையாக உட்கார்ந்துகொண்டு சந்தர்ப்பம் எப்படி வருகிறது என்று காத்துக்கொண்டிருந்தார். எப்போதும் சந்தர்ப்பவாதிகளின் போக்கே இப்படிதான். அவர் காங்கிரசுக்குள்; அவரது கோஷ்டி முன்னேற்றக் கட்சிக்குள்; எப்பேர்ப்பட்ட தந்திரம்! தன் மீது காங்கிரஸ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்காமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். அதே சந்தர்ப்பத்தில் முன்னேற்றக் கட்சியின் அரசியல் அனுகூலங்களையும் சுரண்டிக்கொள்ள வேண்டும். காங்கிரசுக்குள்ளிருக்கும் தனது செல்வாக்கைப் பாதுகாக்கவேண்டும். அத்துடன் தனது கோஷ்டியைப் பயன்படுத்தி முன்னேற்றக் கட்சியையும் தனக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். முன்னேற்றக் கட்சி காங்கிரசுக்குள் ஒற்றுமையைக் குலைக்க முன்வந்தபோது, ரெங்கா தனது நீண்டநாள் கனவாகிய காங்கிரசைக் கைப்பற்றும் ஆசையைப் பூர்த்திசெய்ய முயன்றார். தீவிரவாதிகள் காங்கிரசைப் பிளவுபடுத்தும் முன்னேற்றகட்சியின் கொள்கையைக் கண்டித்தபோது, ரெங்கா தன் எண்ணத்தைப் பூர்த்தி செய்ய முன்னேற்றக் கட்சியுடன் ஐக்கியமாகி அதற்கு ஒத்து ஊதினார். குறிப்பாக ராம்கார் மகாசபையில் போஸ் நடத்திய போட்டி மகாநாட்டில் பரிபூர்ண பங்கு

எடுத்துக்கொண்டார். 'கிசான்-மஸ்தூர் ராஜ்' என்ற தன் புத்தகத்தில் எழுதுகிருர்: "யுத்தத்தின் ஆரம்பகாலத்தில் ராம்காரில் காங்கிரசின் சமரச சாகசங்களை ஒழிக்கப் போட்டி மகாநாட்டை போஸ் நடத்தியபோது கம்யூனிஸ்டுகள் காங்கிரஸ்தான் தேசிய இயக்கதிற்குத் தலைமை தாங்கி நடத்த முடியுமென்று அம் மகாநாட்டை பகிஷ்கரித்துவிட்டனர்."

தீவிரவாதிகள் அனைவருமே காங்கிரஸின் மூலம்தான் ஒரு உண்மையான பொதுஜன இயக்கம் வளர முடியும் என்று நம்பியிருந்தார்கள்; (இதற்கு விதிவிலக்கு ரெங்காவும், முன்னேற்றக் கட்சியும்தான்). அதனுல்தான் தீவிரவாதிகள் எல்லோராலும் காங்கிரஸ் தலைமைப் பதவி ஒப்புக்கொள்ளப்படவேண்டும் என்று கிளர்ச்சி செய்யப்பட்டது. ஆனுல் சந்தர்ப்பவாதியான போஸ் இடதுசாரி சக்திகள் மக்களின் போராட்டத்திற்கு தலைமைதாங்கி நடத்தவேண்டும் என்று கூவியபோது இன்னொரு சந்தர்ப்பவாதியான ரெங்காதான் இதைப் பிடித்துக்கொண்டவர். கிசான்களின் தினசரிப் போராட்டத்தைக் காங்கிரசின் சுதந்திரப் போராட்டத்துடன் இணைப்பதற்குப் பதிலாக காங்கிரசின் தலைமைப் பதவியை எடுத்துக்கொள்ளப்போவதாகப் பெருமையடித்துக் கொண்டார் ரெங்கா. இது சந்தர்ப்பவாதத்தைத் தவிர வேறென்ன?

கிசான்களின் தினசரிப் போராட்டம் பொருளாதாரப் போராட்டமாதலால் கிஸான் சபாக்கள் அரசியல் ரீதியாகக் காங்கிரசுக்கு முன்னதாகவே வழிகாட்டினுல் தானுகவே காங்கிரசின் தலைமைப்பதவி கிஸான் சபாவுக்கு வந்துவிடும் என்று பேராசிரியர் தனது தத்துவத்தை நீட்டிக்கொண்டு போனுர்.

## மக்களின் போராட்டங்களும், ரெங்காவின் பாதையும்

உண்மை என்னவென்றுல் ரெங்கா எப்போதுமே பிரச்சினைகளை எங்களின் முன் கொண்டுவர விரும்பவில்லை. "ஜனங்களுக்கு எப்போதும் தலைமை தாங்க வேண்டும்" என்ற அவரின் பாதை என்னவென்பது முனகாலா, காசிப்பட்டணம் மக்களின் போராட்டங்களில் ஸ்பஷ்டமாய்ப் பார்த்தாய் விட்டது. முனகாலாவில் நிலச்சுவான்களின் எதேச்சாதிகாரத்தைக் கண்ட கிஸான்கள் நிலத்தைத் தங்களுடைய தாக்கிக் கொண்டார்கள். அவர்கள் போலீஸ் அடக்கு முறை ஏவப்பட்டுப் போராட்டம் உச்ச நிலைமையை அடைந்த பொழுது ரெங்கா அங்கு சென்று அவசரப்பட்டு நடவக்கை எடுத்து விட்டதாக கிஸான் தலைவர்களைக் குறை கூறிக் கிஸான் போராட்டத்தை நிறுத்தி விட்டார். உடனே மாகாண கிஸான் சபாவில் எந்த கிஸான் யூனிட்டும் மகாணக் கமிட்டியின் அனுமதியில்லாமல் எந்தப் போராட்டத்தையும்

ஆரம்பிக்கக்கூடாது என்ற தீர்மானத்தை நிறைவேற்ற முயன்ரூர். ஆனல், மற்ற அங்கத்தினர்களால் இது தோற்கடிக்கப்பட்டது. ஒரு பக்கத்தில் ஜனங்களின் உரிமைகளைப் பாதுகாக்க வென்று காங்கிரஸ் மாகாணக் கமிட்டியின் சம்மதமில்லாமலேயே தனிக் காங்கிரஸ்காரர்களும் கீழ்க்கமிட்டிகளும் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்று பிரசாரம் செய்யும் இதே ரெங்கா மற்ருெரு பக்கத்தில் தான் தலைவராயிருக்கும் கிஸான் சபாவில் கீழ்க்கமிட்டிகளுக்கு அந்த உரிமையை அளிக்க மறுத்தார். இது அவரின் சந்தர்ப்ப வாதத்தைத் தவிர வேறென்ன?

மேலக் கோதாவரியில் காசிப்பட்டணத்தில் ஜமீன்தார்கள் நியாய விரோதமாகக் கிஸான்களின் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டபோது கிஸான்கள் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தார்கள். இங்கும் நமது பேராசிரியர் ஸ்தல கிஸான் தலைவர்களை அலக்ஷியம் செய்தார். மக்களின் நலன்களுக்குப் போராட முன்னுக்கு வர என்றுமே அவர் இஷ்டப்பட்டதில்லை என்பதைத்தான் இவைகள் காட்டுகின்றன. மக்களின் விழிப்பும், அவர்களே முன்கை எடுத்துக் காரியத்திலிறங்குவதும் சந்தர்ப்ப வாதத்துக்கு இடங் கொடுக்காதென்பதையும், அம்மாதிரி தலைமைப் பதவிக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுமென்பதையும் அவர் நன்கறிவார். ஆகையால்தான் மக்கள் தாங்களாகவே விழிப்படைந்து முன்னுக்கு வருவதை ரெங்கா விரும்பவில்லை.

## கிசான்-மஸ்தூர் கட்சி கோஷம்

போஸுக்குத் தான் ஏன் பின் தங்கவேண்டும் என்று நமது ஆசிரியரும் ஒரு போட்டி அரசியல் ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். தன்னைப்போன்ற ஒரு அகில இந்திய கிஸான் தலைவருக்கு இது ஒரு பிரமாதமா என்று நினைத்துக் கிசான்-மஸ்தூர் கக்ஷி கோஷத்தைக் கிளப்பினர். "ரெங்காவும், மார்க்சிசமும்" என்ற தன் புத்தகத்தில் இதன் அவசியத்தைப்பற்றிக் குறிப்பிடுதாவது:—

"ஆசிரியர் ரெங்கா கிஸான் மஸ்தூர் கக்ஷியை ஸ்தாபிக்க விரும்பினர். சோஷலிஸ்டுகள் அக்கட்சிக்குள் இருக்கமுடியும். கிஸான் சபைகளும் தொழிற் சங்கங்களும் அதனுடன் இணைந்து கொள்ளமுடியும். இந்தக் கட்சி கிஸான்களையும், தொழிலாளிகளையும், சமரசப்பாதையைப் பின்பற்றுவதனின்றும் காப்பாற்றவும், சோஷலிஸ்டுகளையும் கம்யூனிஸ்டுகளையும் தோல்வி மனப்பான்மைக் கொள்கையினின்றும் காக்கவும் முடியும். கிஸான்-மஸ்தூர் கட்சியின் அடிப்படையில் ஒரு முதல் தர அரசியல் கட்சியை சிருஷ்டிக்க வேண்டுமென்பது அவரது அவா. ஆகவே தான் அவர் கிஸான் மஸ்தூர் கட்சியை ஸ்தாபித்தார்."

(பக்கம் 13)

இன்னொரு இடத்தில் அதே புத்தகத்தில் "கம்யூனிஸ்டுகள் கிஸான் சபைகளின் போராட்டங்களை முன் நின்று நடத்த வராத காரணம் அவர்கள் காங்கிரஸ் சோஷலிஸ்டுகளுக்கு நல்ல பிள்ளை களாக இருக்க விரும்புவதே. ஆகவே அவர்கள் இந்த வேலையை கிசான் சபைகள் செய்யட்டுமென்று விட வேண்டியதுதான். ஆனால், அவர்கள் கிஸான் சபைகள் வர்க்க ஸ்தாபன மாதலால் ஒரு அரசியல் கட்சியால் நடத்தப்பட வேண்டிய போராட்டங்களை அவைகள் நடத்தக் கூடாதென்று இப்போது சொல்வார்கள்." இன்னும் கிஸான்-மஸ்தூர் கக்ஷியை விளக்கிக் "கிசான் மஸ்தூர் மக்களின் அரசாங்கம்" என்ற புத்தகத்தில் எழுதுகிறார். (பக்கம் 25) "பொதுஜன மந்திரி சபைத் தேர்தல்களின் போதும், காங்கிரசின் உதவியுடன் பூர்ஷுவாக்கள் தங்கள் பிரதிநிதித்து வத்தை மக்களின்மீது திணிக்க முற்படும் போதும், மற்ற காங்கிர சின் வால்பிடிக்கும் கட்சிகள் போலல்லாது கிஸான்களையும் தொழிலாளிகளையும் காங்கிரசின் தொடர்பைத் துண்டித்துக் கொள்ளும்படி கிஸான்-மஸ்தூர் கட்சி எச்சரிக்கை செய்யும்."

இவைகளெல்லாம் எதைக் குறிக்கின்றன? காங்கிரஸ் அர சாங்கத்துடன் பேரம் பேசும் சந்தர்ப்பம் தான் கிஸான்-மஸ்தூர் கட்சி தேசத்தின் அரசியல் தலைமைப் பதவியை ஏற்று மிதவாத காங்கிரஸ் தலைமைப் பதவியை நீக்குவதற்கான சரியான தருணம். அது தினசரிப் போராட்டங்களில் மாத்திரம் கவனம் செலுத்திக் கொண்டிருக்க முடியாது. தேசம் பூராவிற்கும் தலைமை தாங்கி நடத்தத் தன் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டும். அதற்கு கிஸான்களையும், தொழிலாளிகளையும், சோஷலிஸ்டுகளையும் கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்ட முதல்தர அரசியல் கட்சி வேண்டுமென்று விரும்புகிற கம்யூனிஸ்டுகள் அவரது வழியில் குறுக்கே நிற்கக்கூடாது. காங்கிரஸ் தனது பேரத்தில் வெற்றி பெற்று மந்திரி சபைகள் அமைத்தால் காங்கிரசுக்கு வால் பிடிக் கும் கம்யூனிஸ்டு கட்சியைப் போலல்லாது கிஸான் மஸ்தூர்கட்சி ஜனங்களின் ஆட்சியை ஏற்படுத்தத் தனியாகத் தலைமை தாங்க முன்வரவும், காங்கிரசின் பூர்ஷுவாப் பிரதிநிதிகளுக் கெதிராகத் தேர்தல்களில் போட்டிப் பிரதிநிதிகளை நிறுத்தவும் தயங்காது.

காங்கிரசின் ஒற்றுமையைக் குலைக்க போஸ் முன்னேற்றக் கட்சிஆரம்பித்ததற்கும், ரெங்கா கிஸான்-மஸ்தூர் கட்சி ஸ்தாபித்த தற்கும் ஏதாவது வித்தியாசமிருக்கமுடியுமா? அவர்கள் இருவ ரின் லக்ஷியம் ஒன்றுதான். பாதையில் தான் சிறிது வித்தியாசம்.

காங்கிரஸ் சுதந்திரப் போராட்டத்தை நடத்தினால் அரசியல் தலைமைப்பதவி தன் கையைவிட்டுப் போய்விடுமே என்ற பயம் அவருக்குண்டு. ஆகவே காங்கிரசுக்கு முன்னதாகவே போராட்

டத்தை ஆரம்பிப்பதின்மூலம் அரசியல் தலைமைப்பதவியைத் தன் கையில் வைத்துக்கொள்ளலாமென்று நினைத்தார். காங்கிரஸ் பதவியேற்றாலும், அரசியல் தலைமைப் பதவி தன்னிடம் தானிருக்கும்; கிசான், தொழிலாளிப் பிரதிநிதிகள் பலரைத் தேர்தலில் கொண்டுவந்து விடமுடியும். நமது ஆசிரியர் சந்தர்ப்ப விரோதமான சுலோகங்களின் மூலம் தேசத்தின் தலைமைப் பதவியைப் பிடுங்கிவிடலாமென்று நினைத்தது பரிதாபத்துக்குரிய விஷயம். இடதுசாரி பாஷையைப் பிரயோகிப்பதில் மாத்திரம் என்ன பலன். முடிவில் அவருடைய குட்டிக்கரணங்கள்தான் எதிரியை முறியடிப்பதிலும், சுதந்திரப் போராட்டத்தை வெற்றிகரமாய் நடத்துவதிலும் அவருடைய புத்திசாலித்தனத்தை உபயோகப் படுத்தியிருக்க வேண்டுமே தவிர தனது குரலை அன்றாடம் மாற்றிக்கொண்டு போவதிலல்ல. இப்படியாக நமது பேராசிரியர் அரசியல் தலைமைப்பதவிக்காக வியர்த்தமாகப் போராடினார்.

ஏகாதிபத்திய யுத்தகாலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய மக்களின் சம்மதமின்றி அவர்களை யுத்தத்தில் இழுத்துவிட்டது; காங்கிரஸ் மந்திரிசபைகள் உடனே ராஜினாமாச்செய்தன. இதைக் கண்டு இடதுசாரிக்கு திருப்தி ஏற்பட்டது. எல்லா தேசபக்திக் கட்சிகளையும் சேர்த்து சுதந்திரத்துக்காகப் பொதுஜனப் போராட்டத்தை ஆரம்பிக்கக் காங்கிரஸைத் தலைமை தாங்கும்படி வற்புறுத்த எல்லா இடதுசாரிக் கட்சிகளும் ஒன்றுபட்டு வேலைசெய்ய வேண்டுமென்று கம்யூனிஸ்டு கட்சியும், அகில இந்திய கிசான் சபாவும் விரும்பியது. தனி நபர் சத்தியாக்கிரகம் தலைவர்களை மக்களிடமிருந்து பிரிக்கிறது; அதனால் சுதந்திரப் போராட்டம் பலப்படவில்லை. ஜனங்கள, கிசான்கள், தொழிலாளிகள் இவர்கள் மத்தியில் பொதுஜனப் போராட்டத்தை நடத்துவதின்மூலம்தான் தேசிய இயக்கத்துக்கு ஒரு புதிய விறுவிறுப்பு ஏற்படுத்தமுடியும் என்று கூறியது.

இந்தக் கொள்கையை ரெங்கா மறுத்துத் தன் பத்திரிகையாகிய "கிராந்தி" மூலம் இடதுசாரிப் பகுதி காங்கிரசினின்றும் ராஜினாமாச் செய்து கிசான்—மஸ்தூர் கட்சியின் தலைமையில் போராட்டத்தை நடத்தவேண்டுமென்றும், தொழிலாளிகள்–கிசான்களுக்கு ஒரு புதிய உறுதிமொழி கொடுக்க வேண்டுமென்றும் எழுதினார். (ஜன. 7, 14, 1940)

சுதந்திர தினத்திற்குத் தனியான உறுதிமொழி தயாரித்துத் தனியாகக்கொண்டாடியதின் மூலம் தனது அரசியல் பொதுஜனப் போராட்டத்தின் முதல் அத்தியாயத்தை ஆரம்பித்தார். எந்த சந்தர்ப்பத்தில் காங்கிரசில் மகத்தான ஒற்றுமை அவசியமோ அந்த சந்தர்ப்பத்தில், அதுவும் புனிதமான சுதந்திரதினத்

தில் ரெங்காவும், போஸூம் காங்கிரசின் பலத்தையும், ஒற்றுமையையும் சிர்குலேக்க முழுப்பங்கெடுத்துக் கொண்டனர். காங்கிரஸ் சட்ட நிர்ணய சபையில் புகும்போது கிசான்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் கிடைக்காததாகையால் அவர்கள் ஒரு கிசான்—தொழிலாளிகள் அரசாங்கத்தை ஸ்தாபிக்கப் போராட்டத்தை ஆரம்பித்ததாக அறிவிக்கும் ஒரு புதுப்பிரமாணத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது ரெங்காவின் வாதம். சோஷலிசத்தில் நம்பிக்கையுள்ள எல்லோருடைய இறுதி லக்ஷியமும் தொழிலாளிகள்—விவசாயிகள் அரசாங்கம்தான். ஆனல் சுதந்திர தினத்தன்று எல்லாப்பகுதி மக்களும் அடிமைத்தளைகளைத் தகர்ப்போமென்று ஒரே குரலில் சபதமேற்கும்போது இந்த வித்தியாசத்தைக் கற்பிக்கவேண்டிய அவசியமில்லை. தொழிலாளி விவசாயி அரசாங்கமென்பது சுதந்திர லக்ஷியத்துக்கு அடுத்தபடி நடைமுறையில் ஒரு மேற்படியே தவிர, முரண்பட்டதல்ல. இந்த நிலையில் ரெங்கா இந்த வித்தியாசத்தைக் கற்பித்தது வெறுக்கத் தக்க விஷயம்.

இம்மாதிரியான ரெங்காவின் சந்தர்ப்பவாதக் கொள்கைக்குக் காரணம் காங்கிரசுக்கும், அரசாங்கத்துக்கும் ஒப்பந்த மேற்பட்டால் அதில் தனக்குரிய பங்கு கிடைக்காதோ என்ற பயம்தான், சமரசத்துக்கு விரோதமாக வாய்ப்பேச்சில்தான் போராட்ட கோஷமே தவிரக் காரியத்தில் அரசியல்முடிவை ஏற்றுக்கொள்ளத் தயாராய்த்தான் இருந்தார். தன்னுடைய மிதவாத எண்ணங்களுக்குத் "தொழிலாளிகள்—கிசான்கள் புரட்சிப் போராட்டம்" என்ற முகமூடி போட்டார்.

## தனி நபர் சத்தியாக்கிரகமும், ரெங்காவின் சறுக்கலும்

காங்கிரசிலிருந்து விலகிப் புரட்சிப் போராட்டத்தை நடத்த வேண்டுமென்று ஜம்பமடித்த ரெங்காவும், கிசான் மஸ்தூர் கட்சியும் 1940ல் என்ன செய்த தென்பதைப் பார்ப்போம். முதலில் ரெங்கா வார்தாவில் காந்திஜியை பேட்டிகண்டு நிடுபரோலுக்குத் திரும்பிவந்தார். வகுப்புப்பிரச்சினைக்குப் பரிகாரம் காணமல் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கக் கூடாதென்றும், வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டால் முடிவு வேறுவிதமாகப் போய்விடுமென்றும் விளம்பரப்படுத்தினர். பிறகு தன் பத்திரிகை "கிராந்தி" யில் ஜனங்கள் காங்கிரசிலிருந்து விலகிப் பிறகு ஜெயிலுக்குப் போகவேண்டுமென்று விரித்து தள்ளினர், ஆனல், செப்டம்பர் 1940ல் சத்தியாக்கிரகம் ஆரம்பித்த உடன அவரும் அதை சந்தோஷத்துடன் திடீரென்று வரவேற்றார். பல்டி அடிப்பதில் பலே பேர் வழி ரெங்கா. காங்கிரசிலிருந்து விலகிப் புரட்சிகரமான புரட்சிப் போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டு மென்று விரும்பிய

அதே ரெங்கா மறு மூச்சில் மகாத்மாவின் சத்தியாக்கிரகம் புரட்சிகரமானது என்று புகழ்ந்தாரென்றால் அதை என்ன வென்பது? இம்மாதிரியான பல்டிகள் அடிக்க வெறும் கோஷங்களைக் கூச்சலிடும் ரெங்காவைப் போன்ற சந்தர்ப்ப வாதிகளால்தான் முடியும். கம்யூனிஸ்டுகள் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளாததால் கோழைகள் என்று குற்றஞ் சாட்டுவதற்கு அவருக்கு எவ்வளவு நெஞ்சழுத்தமும் அகம்பாவமும் இருக்கவேண்டும். ரெங்காவைப் போல் அரசாங்கத்துக்கெதிராக ஜனங்களின் போராட்டங்களை நடத்தாமல் ஜெயிலுக்குப் போய் விடுவதின் மூலம் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் காங்கிரசின் ஒற்றுமையை கம்யூனிஸ்டுகள் பலப்படுத்திக் கொண்டிருந்ததற்காகவா அம்மாதிரி கூறுகிறார்? கம்யூனிஸ்டுகள் தொழிலாளர்கள்—கிஸான்கள் கோரிக்கைகளுக்காக அரசாங்கத்தை எதிர்த்து, விடாமல் போராடி மக்களின் இயக்கத்தைப் பலப்படுத்தியும், ரெங்கா—போஸ் கும்பலின் சீர்குலைவுப் போக்கைத் தடுத்தும் வந்தார்கள். ஜனங்களின் உரிமைகளுக்காகப் போராடியதால் எவ்வளவு ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகள் அரசாங்கத்தின் கோபாவேசத்துக்கு ஆளாகித் தயக்க மன்னியில் சிறை சென்றார்கள் என்பது ரெங்காவுக்குத் தெரியுமா?

கிசான்-மஸ்தூர் கட்சி, தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் என்ற தீவிர கோஷங்களின் மூலம் காங்கிரசைக் கைப்பற்ற ரெங்கா முயன்றார் என்பதையும், அரசியல் விழிப்பு பெற்ற கிசான் இயக்கம் அவரது போட்டி மனோபாவத்துக்கு இடம் கொடுக்காமல் காங்கிரசின் ஒற்றுமையைக் காப்பாற்றப்பாடுபட்டதென்பதையும் பார்த்தோம். கிசான் இயக்கத்தில் தன் தில்லுமல்லுகள் செல்லாததைக்கண்ட ரெங்கா காந்திஜியினது ஆசீர்வாதத்தையும், காங்கிரஸ் தலைவர்களின் மன்னிப்பையும் பெற்று சத்தியாக்கிரகத்தில் கலந்து பாபவிமோசனம் செய்துகொள்ள முடிவு செய்தார்.

---

## ஆகஸ்டு கலவரங்களும், ரெங்காவும்

அரசாங்கம் திடீரென்று காங்கிரஸ் தலைவர்களைக் கைது செய்ததின்மூலம் ஜனங்கள் ஆத்திர மூட்டப் பட்டெழுந்தபோது நமது ஆச்சாரியாவுக்கு இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்தது. சுதந்திரத்திற்குப் போராடுவதாக நினைத்து நாசவேலைகளின் மூலம் அரசாங்க அடக்குமுறையை எதிர்த்து மக்கள் போராட விரும்பினார்கள். உண்ணாவிரதத்தின் போது காந்திஜியின் அறிக்கைகளிருந்

தும், ஸ்ரீமதி சரோஜினி, ஆசாதினிடமிருந்தும் இந்த நடவடிக்கைகளுக்கும், காங்கிரஸுக்கும், காந்திஜிக்கும் எவ்வித சம்பந்தமில்லை என்பது நமக்குத் தெரிந்தது. கம்யூனிஸ்டு கட்சியும், கிஸான் சபாவும் முன்கூட்டியே தேசப்பாதுகாப்பை நாசம் செய்வதற்கும் சுதந்திரத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்றும், நாச வேலை உடனே நிறுத்தப்பட வேண்டுமென்றும் பட்டவர்த்தனமாய் சொல்லி வந்தது. எவ்வளவோ எதிர்ப்பிற்கிடையில் ஜனங்களின் தேவைகளுக்காகவும், உணவுப் பிரச்சினையைத் தீர்க்கவும், காங்கிரஸ்-லீக் ஒற்றுமையை ஏற்படுத்தவும், தலைவர்கள் விடுதலைக்காவும், தேசிய அரசாங்கம் ஏற்படுவதற்காகவும் இவைகள் பாடுபட்டன. வங்காளம், ராயலசீமா, கேரளா முதலிய இடங்களில் பஞ்சத்தையும் பிணியையும் போக்க முழு மூச்சுடன் வேலை செய்தன.

இந்த சமயத்தில் ரெங்காவும் அவரது கோஷ்டியும் என்ன செய்தார்கள் என்பதைப் பார்ப்போம். தலைவர்கள் கைது செய்யப்பட்டதால் ஏற்பட்ட சந்தர்ப்பத்தைக் கண்டு சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தார். காங்கிரஸ் தலைமைப் பதவியைக் கைப்பற்ற வேண்டும் என்ற தன் வாழ் நாளின் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளும் சந்தர்ப்பமிது என்று புளகாங்கிதமானார். காங்கிரஸ் இயந்திரத்தைக் கைப்பற்ற அவர்கள் முயற்சி செய்தார்கள். நாச வேலைகளைத் தூண்டினார்கள். காங்கிரஸ் தான் கலவரங்களை ஆரம்பித்தது என்ற அரசாங்கத்தின் குற்றச் சாட்டுக்களை காந்திஜி மறுத்த பிறகுகூட ரெங்கா கோஷ்டி காங்கிரசின் பெயரால் "ரணகர்ஜனை" என்ற சட்ட விரோதமான பத்திரிகையை ஆரம்பித்து நடத்தியது. ஜப்பானுக்கு சாதகமாகப் பிரச்சாரம் செய்வதற்குக் கூட அவர்கள் தயங்கவில்லை. ஆகஸ்டு 9உ வருடாந்திரக் கொண்டாட்டத்திற்கு முன்னேற்றக்கட்சி, கா.சோ. கட்சி இவற்றுடன் தன் பத்திரிகையில் நாசவேலைகள் திட்டமொன்று தயாரித்துக் கொடுக்கப்பட்டது. ஜெயப்பிரகாஷ் அதே சஞ்சிகையில் சுதந்திரப் போராட்டத்தில் இரண்டாவது தாக்குதலுக்கு ஜனங்களைத் தயாராகயிருக்கச் சொன்னார். 1943 ஆகஸ்டில்தான், காங்கிரஸ் எந்தப் போராட்டத்தையும் ஆரம்பிக்கவில்லை என்று தேசபக்தர்களுக்குப் பட்டது. ஸ்ரீமதி நாயுடுவும், கொண்டா வெங்கிட்டப்பையாவும் காங்கிரசின் பெயரால் யாரும் எந்தப்பத்திரிகையும் நடத்தக் கூடாதென்று அறிவித்தார்கள். ஆனால் ரெங்கா, கோஷ்டி மாத்திரம் தங்கள் "ரணகர்ஜனை"யைத் தொடர்ந்து நடத்தி காங்கிரசின் பெயரால் நாசவேலைகளை ஆதரித்தார்கள். "ரணகர்ஜனா"வின் வியாசங்கள் முன்னேற்றக் கட்சி, கா. சோ. கட்சி பிரச்சாரங்கள் இவைகள் எல்லாம் ரெங்கா கோஷ்டியின் "ஜமீன்

ரயத்து" பத்திரிகையின் ஆகஸ்டு 6-ந் தேதி இதழில் வெளி வந்தன. இதே இதழில் ஜெயப்பிரகாஷ நாராயணரின் இரண்டாவது தாக்குதல் கோஷம் வெளியிடப்பட்டது. "தேசிய இயக்கத்தின் எல்லா சக்திகளும் சேகரிப்புடன் சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு பயன் படுத்தப்பட வேண்டுமென்று கோரப்பட்டது. முன்பு நடந்த நாசவேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கூறுவது தான் இதன் அர்த்தம். இம்மாதிரி இப்பத்திரிகையில் ஜப்பானுக்கு சாதகமான நடவடிக்கைகள் சட்ட பூர்வமான தொனியில் வெளியிடப்பட்டன. காந்திஜியின் புனிதப் பெயரை மாசு படுத்தக் கூடிய கட்டுரைகள் கூட வெளியாயின. உதாரணமாக 8-10-43ல் இரவு காந்திஜி காலமானர் என்ற பெயரால் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகளை ஆதரித்தும், காந்திஜி போராட்டத்தை மறுத்துவிட்டார் என்ற கூற்றை இல்லை என்றும் எழுதியிருந்தது. காந்திஜி இந்த இயக்கத்திற்கும் காங்கிரஸுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்று சொன்னது எல்லோருக்கும் தெரிந்திருந்தும் ரெங்காவின் கோஷ்டி தங்களுடைய நாச வேலைகளுக்கு காந்திஜியின் பெயரைக் கூட உபயோகபடுத்திக்கொள்ளத் துணிந்தார்கள். இதே பத்திரிகையானது தோழர் பாணி சக்கரவர்த்தி கொலை செய்யப்பட்டபொழுது இக்கம்யூனிஸ்டுகளைப் பின்பற்றுகிறவர்களுக்கு இம்மாதிரி கதிதான் ஏற்படுமென்று ஆதரித்தெழுதியது. இவைகளெல்லாம் ஐந்தாம் படை நடவடிக்கைகளல்லாது வேறென்ன?

அவர்கள் நடவடிக்கைகளிலுங் கூட கொள்ளையையும், திருட்டையும், கலகத்தையும் நேரடியாக ஆதரித்தார்கள். கடப்பா காங்கிரஸ்காரர்களுக்கு ரெங்காவே நேராக நாசவேலைகளின் முக்கியத்துவத்தைப்பற்றி ஹிதோபதேசம் செய்தார். அவருடைய கோஷ்டி அவர்களைப் பின்பற்றுபவர்களின் உதவியைக் கொண்டு விசாகை, குண்டூர், பாபட்லா முதலிய இடங்களில் கொள்ளையடித்துக் கலகமும் செய்தார்கள். உணவுப் பிரச்சினையைத் தீர்க்கும்வழி கலகமும் கொள்ளையுந்தான் என்று பிரச்சாரம் செய்தார்கள். கள்ள மார்க்கெட்டை ஆதரித்துப் பங்கீட்டை எதிர்த்தார்கள். அரசியல் அரங்கத்தில் செய்தது போலவே பொருளாதார அரங்கத்திலும் அராஜகத்தைப் பிரச்சாரம் செய்தார்கள்.

1943 ஆகஸ்டுக்குப் பிறகு ரெங்காவின் கோஷ்டி தங்களது சட்ட பூர்வமான பத்திரிகை மூலமாகவும், சட்ட விரோதமான பத்திரிகை மூலமாகவும் காங்கிரசின் பெயருக்கே கேடு விளைவிக்கும் முறையில் பிரச்சாரம் செய்தார்கள்; செய்கையிலிறங்கினர்கள். இந்தக் கொள்கையைப் "புரட்சிகரமான தேசியப் போராட்டம்"

என்று விளம்பரப்படுத்தி கம்யூனிஸ்டு கட்சியும், கிஸான் சபாவும் தேசிய எதிரிகள்; அவைகளுக்குத் தேசிய முகாமில் இடங்கிடையாது என்று பறையடித்தார். யார் தேசத் துரோகிகள் என்பது ஜனங்களுக்குத் தெரியும். காங்கிரசின் பரம்பரை பாசிஸ எதிர்ப்புக்கு விரோதமாகவும், காங்கிரசின் அஹிம்சா கொள்கைக்கு விரோதமாகவும் சென்று ஜப்பானுக்கு சாதகமான நாச வேலைகளையும், கள்ள மார்க்கெட்காரர்களை ஆதரிக்கும் வெட்கங் கெட்ட பிரச்சாரத்தையும் செய்த ரெங்கா கோஷ்டியார் தேசத் துரோகிகளா, அல்லது இவைகளை எதிர்த்துப் போராடி தேசியப் பாதுகாப்புக்கும், தேசிய ஒற்றுமைக்கும், தேசிய அரசாங்கத்துக்கும், உணவுப் பிரச்சினை, நிவாரண வேலைகள் இவைகளைப் போன்ற மக்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பாடுபட்ட கம்யூனிஸ்டுகள் தேசத் துரோகிகளா என்று கேட்கிறோம்?

•

---

# ரெங்கா கோஷ்டியின் பிளவு சூழ்ச்சிகள்

கிஸான் இயக்கத்தில் ரெங்காவின் பிளவு வேலைகளைப் பற்றி கவனிப்பதற்கு முன் கிஸான் ஒற்றுமைக்கு ரெங்கா என்ன முயற்சி எடுத்துக்கொண்டார் என்பதைப் பார்ப்போம்.

1930-33-ல் ஒத்துழையாமை இயக்கம் வாபீஸ் வாங்கப்பட்ட பிறகு பெரும்பாலான காங்கிரஸ் ஊழியர்கள் கிஸான் இயக்கத்தில் இழுக்கப்பட்டனர். காங்கிரஸ்காரர்கள், கம்யூனிஸ்டுகள், ரெங்கா எல்லோரும் காங்கிரஸுக்கு மூலபலமாக ஒரு வலுவான கிஸான் இயக்கத்தைக் கட்ட வேலை செய்தார்கள். பல்வேறு கிஸான் ஸ்தாபனங்களையும் ஒன்றுபடுத்தி ஒரு பெரிய கிஸான் சபையை சிருஷ்டிக்க முயற்சிகள் செய்யப்பட்டன. ஆந்திர மாகாண கிஸான் சபாவிற்குள்ளேயே பலதரப்பட்ட அரசியல் கோஷ்டிகளும் சேர்ந்து வேலைசெய்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. அந்த சந்தர்ப்பத்தில் ஆந்திர மாகாணக் கிஸான் சபா, ஆந்திர மாகாண ஜமீந்தார் கிஸான் சபா, கிசான் ரக்ஷண சபா, தென்னிந்தியக் கிஸான் தொழிலாளிகள் சபா என்ற பல ஸ்தாபனங்கள் இருந்தன. ஆந்திர மாகாணக் கிஸான் சபாதான் அதிகப்படியான அங்கத்தினர்களுடையதாயும் பிரதிநிதித்துவத் தன்மையையுடையதாயுமிருந்தது. மேலும் அதன் ஊழியர்கள் இரண்டாவது மூன்றாவது சபாவிலும் தொடர்பு கொண்டிருந்ததினால் முதல் மூன்று கிஸான் சபாக்களுக்கும் நெருங்கிய சம்பந்தமிருந்தது. பெரும்பாலான கிஸான் ஊழியர்களும் கம்யூனிஸ்டு

களும் எல்லா கிஸான் சபாக்களையும் ஆந்திர மாகாண கிஸான் சபாவில் ஒன்ருக்கிப் பல ஸ்தாபனங்களுக்குப் பதிலாக ஒரே சபாவின் கீழ் அங்கத்தினர்களைச் சேர்க்க விரும்பினுர்கள். ரெங்கா இதற்கு நேரடியாக எதிர்ப்புக்கு வராவிட்டாலும் கிஸான்கள் ஒன்று படுவதற்குப் பல தடங்கல்களை ஏற்படுத்தினுர்.

கிஸான் ரக்ஷண சபாவும், தென்னிந்திய தொழிலாளி கிசான் சபாவும் அவரது சிருஷ்டிகள். அவரது சொந்த ஆட்களைத் தவிர வேறு அங்கத்தினர்கள் அவைகளுக்குக் கிடையாது. அவைகளையும் ஆந்திர மாகாண கிஸான் சபாவுடன் இணைக்க வேண்டுமென்ருல் ரெங்காவால் சுளுவாகச் செய்திருக்க முடியும். இம்மாதிரி செய்து மற்ற ஸ்தாபனங்களும் ஆந்திர மாகாண கிசான் சபாவுடன் ஒன்றுபட வழிகாட்டுவதற்குப் பதிலாக அவர் தன் ஸ்தாபனங்களைத் தனியாகவே வைத்திருக்க முடீன்ருர். தனியாக இருந்தால் தன் இஷ்டப்படி செய்வதைப்போல் ஆந்திர மாகாண கிசான்சபாவில் தன் வாலை நீட்ட முடியாதென்பது அவருக்குத் தெரியும். அப்படியில்லையானுல் தன் சட்டைப் பையிலிருக்கும் தன் ஸ்தாபனங்களை ஆந்திர மாகாண கிஸான் சபாவுடன் ஏன் இணைத்திருக்கக் கூடாது?

கிஸான் ரக்ஷண சபாவின் அவசியம் பற்றிக் "கிஸான் இயக்கம்" என்ற தன் புத்தகத்தில் "1931-ல் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்கள் ஆந்திரமாகாண கிஸான் சபாவைக் கைப்பற்றப் பெரு முயற்சி செய்தனர். வி. ராமதாசின் உதவியுடன் சிலமாதங்கள் முயன்று வெற்றிபெற்ருர்கள். காங்கிரஸ்காரர்களும், அந்தப்பிற்போக்கான ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும் சேர்ந்து ராமதாஸைத் தலைவராக அதற்குத் தேர்ந்தெடுத்தார்கள். இதை எதிர்பார்த்துத்தான் கிஸான் இயக்கத்தின் வர்க்க நலன்களைப் பாதுகாக்கவும், காங்கிரஸுடன் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தவும், வர்க்க உணர்ச்சி பெற்ற கிஸான்களின் உதவிகொண்டு கிஸான் ரக்ஷண சபாவை ஆரம்பித்தேன்," என்று அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

உண்மையாகவே 1931-ல் கிஸான் இயக்கத்தை ஏமாற்றக்காரர்களான ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களிடமிருந்து காப்பாற்றத் தன் சபாவை ஆரம்பித்திருந்தால் 1936-ல் ஆந்திர மாகாணக் கிஸான் இயக்கத்துடன் அதை இணைப்பதற்கு எந்தத்தடை குறுக்கே நின்றது. அந்த சந்தர்ப்பத்தில் ஆந்திர மாகாணக் கிஸான் சபா ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களிடமில்லை. அதற்கு நேர்மாருக தீவிர கம்யூனிஸ்டுகள் கையிலும், ஒரு பகுதி அவரது சீடர்கள் கையிலும் தானிருந்தது. வர்க்க நலனைக் காப்பாற்ற ஒரு தனிக் கிஸான் சபாவை வைத்துக்கொள்ள என்ன அவசியம் அப்போதிருந்தது.

தன்னுடைய பழைய திருவிளையாடலை நீடிக்க விரும்பியதால் அதை இணைக்க மறுத்தார். அவசியமேற்படும்போது தனது சந்தர்ப்பவாதத்துக்குத் தகுந்தபடி தனியாக வழி காட்டுவதற்கு ஏதுவாகவே அவ்வாறு செய்தார்.

இதே எண்ணத்துடன் தான் தனது தென்னிந்திய தொழிலாளி கிஸான் சபாவையும், ஆந்திர மாகாண கிஸான் சபாவுடன் இணைக்க மறுத்தார். மற்ற இரண்டு கிஸான் சபாக்களின் தலைமைப் பதவியில் செல்வாக்கிருந்து அவர் அவைகளை ஒரு ஒன்றுபட்ட மாகாண கிஸான் இயக்கத்தின் அவசியத்தை வற்புறுத்த முன் வந்தாரில்லை. தன்னையே ஒரு தனிப்பெரும் கிஸான் தலைவராக நினைத்துக்கொண்டு தன் ஸ்தாபனத்தையே ஆந்திர மாகாண கிஸான் சபாவுடன் ஒன்று படுத்த முன் வராத போது இதைச் செய்யும்படி எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்? எப்போதுமே ரெங்கா காகித அளவில் ஸ்தாபனங்களையும், ஜோபில் கட்சிகளையும், தனிப் பத்திரிகைகளையும் தயாராக வைத்துக்கொண்டிருப்பது வழக்கம். அப்போதுதான் தன் தலைமைப் பதவியை ஸ்தாபித்துக்கொள்ளவும், பாதுகாத்துக்கொள்ளவும் முடியும் என்பது அவருக்குத் தெரியும். அம்மாதிரியான ஸ்தாபனந்தான் இப்போதிருக்கும் அவரின் கிஸான் காங்கிரஸ். ஆனால், இந்த முயற்சிகள் கிஸான்களிடம் செல்லாது. கிஸான்களின் அன்றாடக் கோரிக்கையைக் கவனிக்க முன்வந்தால்தான் அவர்களின் நம்பிக்கையைப் பெற முடியும். இவருடைய தடங்கல்களையெல்லாம் தகர்த்தெறிந்து ஆந்திர மாகாண கிஸான் சபா தங்கள் கோரிக்கைகளுக்குப் போராடும் கிஸான்களை ஒன்று படுத்தி ஸ்தாபன ரீதியாகத் திரட்டி ஒவ்வொரு கிஸானின் ஹிருதயத்திலும் நீங்காத இடம் பெற்றுவிட்டது.

## ரெங்காவின் பிளவு நடவடிக்கைகள்

## அகில இந்திய கிஸான் சபையினின்றும் அவரது முறிவு

ரெங்கா கிஸான் இயக்கம் பூராவையும் ஒரு கிஸான் சபாவில் ஐக்கியப்படுத்த இடைஞ்சல் செய்தபோதிலும் யுத்தத்துக்கு முன் கம்யூனிஸ்ட் கட்சி, ரெங்கா கோஷ்டி போன்ற பல அரசியல் கட்சிகள் ஆந்திர மாகாண கிஸான் சபாவுக்குள் ஒன்றுபட்டு வேலை செய்துவந்தார்கள். சில ஜில்லாக்களில் ரெங்கா கோஷ்டிக்கும், சில ஜில்லாக்களில் கம்யூனிஸ்டுகளுக்கும் செல்வாக்கிருந்தது. ஆனால், பொதுவாக ஜில்லாக்களிலும் மாகாணத்திலும் சேர்ந்தே வேலைசெய்துவந்தனர். யுத்தம் ஆரம்பித்து அவசரச் சட்ட ஆட்சி வந்ததின் காரணமாக பல கம்யூனிஸ்டுகள் பாதுகாப்பில் வைக்கப்பட்டார்கள். மற்றவர்கள் மறைந்திருந்து வேலை செய்ய

வேண்டியதாயிற்று. ஆகவே, ஏகாதிபத்திய யுத்த காலத்தில் பூரா விவகாரங்களும் ரெங்காவின் கோஷ்டியின் கையில் ஒப்படைக்கப்பட்டாகி விட்டது. ஆந்திர மாகாண கிஸான் சபா வெளிப்படையாய் வேலைசெய்ய முடியவில்லை. மேலக் கோதாவரி ஜில்லாத் தலைவர்களும் கிழக் கோதாவரி ஜில்லாத் தலைவர்களும், காரியதரிசிகளும் கைது செய்யப்பட்டுவிட்டார்கள். கிருஷ்ணா ஜில்லாவில்தான் கிஸான் சபா எப்போதும்போல் வேலை செய்ய முடிந்தது. 1941-ல் மேலக் கோதாவரியில் கிஸான் சபாவைப் புதுப்பிக்க கம்யூனிஸ்டுகள் முயன்றபோது மாகாணக் கிஸான் சபாவின் ஆதிக்கத்தைக் கைப்பற்றியிருக்கும் ரெங்கா கோஷ்டி அங்கத்தினர் ரசீது புத்தகங்கள் கொடுக்க மறுத்துவிட்டது. பழைய புத்தகங்களில் அங்கத்தினர் சேர்த்துப் பணமனுப்பினாலும் அங்கத்தினர்களின் பெயர்களை ஜாபிதாவில் சேர்ப்பதில்லை. மாகாணக் கிஸான் சபாவில் அச்சடித்துக்கொடுக்கப்பட்ட ரசீது புத்தகங்கள்தான் செல்லுபடியாகும் என்று தீர்மானம் நிறைவேற்றியும்,இன்னும் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்குள்ள ஜில்லாக்களுக்குப் புத்தகங்கள் கொடுக்காமலும் பல வழிகளில் இடைஞ்சல் செய்தார்கள். இது சம்பந்தமாக இந்த உண்மையை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ரெங்காவினிடம் மாகாணக் கமிட்டி சிக்குவதற்கு முன்பு ஜில்லா கிஸான் சபாக்கள்தான் அங்கத்தினர் ரசீது புத்தகங்களை அச்சிட்டுக்கொண்டன. இந்தப் புதிய பழக்கத்தைப் புகுத்தியதே தலைமைப் பதவியைத் தன் கையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசையினால்தான் என்பது தெளிவாகியது.

1942-ல் கம்யூனிஸ்ட் கட்சி சட்டபூர்வமாக்கப்பட்டு விடுதலையான கம்யூனிஸ்டுகள் தத்தம் ஜில்லாக்களில் கிஸான் இயக்கத்தைப் புதுப்பிக்க ஆரம்பித்ததானது ரெங்காவுக்கு வெகு கசப்பாயிருந்தது. கிழக் கோதாவரி, மேலக் கோதாவரி ஜில்லாக்களில் எந்த சமயத்திலும் கிஸான் சபாவுக்கு சம்பந்தமில்லாத சில புது ஆசாமிகளைத் தலைவராக்கியபோது கம்யூனிஸ்டுகள் தங்கள் கண்டன அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிட்டு ஒற்றுமையைக் கருதி அவர்களின் தலைமையில் வேலை செய்துவந்தார்கள். அங்கத்தினர் ரசீது புத்தகங்களுக்கு ஸ்தாபகர்கள் மூலமாக அவர்கள் மாகாண கிஸான் சபாவுக்கு செய்துகொண்ட வேண்டுகோளெல்லாம் பயனற்றதாய்விட்டது. வேறு வழியில்லாமல் அகில இந்திய கிஸான் சபாவுக்கு அப்பீல் செய்து, பிறகு சுவாமிஜி அவர்கள் கிடைத்த புகார்களை விசாரித்து கடைசியில் ஜில்லாக்களுக்கு ரசீது புத்தகங்கள் உடனே கொடுக்கும்படி உத்திரவிட்டார். அப்படியும் ரெங்கா ரசீது புத்தகங்களை கிருஷ்ணா ஜில்லாவுக்குக் கொடுத்தா

ரில்லை. ஆனால், புத்தகங்களை அச்சிட்டுக்கொள்ள அனுமதி கொடுத்தார். அந்த வருஷம் அங்கத்தினர் சந்தா டிசம்பருக்குள் சேர்த்தாகவேண்டும். ஆகவே கம்யூனிஸ்டுகள் சீக்கிரம் புத்தகங்களைக் கொடுக்கும்படி வேண்டினர். அகில இந்திய கிஸான் சபைத் தலைவரும், காரியதரிசியும் சீக்கிரம் கொடுக்கும்படி மாகாணத் தலைமைப் பதவியை வற்புறுத்தினர். இந்த நிலைமைகளுக்கிடையே மாகாண கிஸான் காரியக் கமிட்டிக் கூட்டத்தில், "தேசத்திலிருக்கும் அசாதாரண நிலைமையை உத்தேசித்தும், ஜனங்களின் சாதாரண உரிமை பறிக்கப்பட்டிருப்பதை உத்தேசித்தும் கிஸான் சபாவின் அமைப்பு, விதிகளின்படி வேலைசெய்ய முடியாது," என்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டது ரெங்காவின் கோஷ்டி. என். வெங்கட்டராம நாயுடு என்பவர் மாகாண ஏஜெண்டாக நியமிக்கப்பட்டார். அவசிய மேற்படும்போது ஜில்லாக்களில் ஸ்தல ஏஜெண்டுகளை நியமிக்கவும், தனக்குப் பிறகு மாகாண ஏஜெண்டை நியமிக்கவும் அதிகாரம் அளிக்கப்பட்டார்.

அடிமை நாடாகிய நமது தேச அரசியலில் உரிமைகள் பறிக்கப்படுவதும் பொதுஜன நடவடிக்கைகள் தடுக்கப்படுவதும் புதிதல்ல. யுத்தத்துக்குப் பிறகு இந்தியப் பாதுகாப்புச் சட்டம் தான் கவர்ன்மெண்டின் கொள்கையாகிவிட்டது. இருந்தும் அகில இந்திய கிஸான் சபா சட்டபூர்வமான அந்தஸ்துடன் கூடுமான வரையில் தேச சேவை செய்ய சந்தர்ப்பமிருக்கும்போது கிஸான் சபாவின் விதிகளை அழித்து ஏஜெண்டை நியமிக்க ரெங்காவுக்கு என்ன தைரியமிருந்திருக்க வேண்டும். இவ்வளவுக்கும் மத்தியில் கம்யூனிஸ்டுகளும் இதர தேசபக்திக் கிஸான் ஊழியர்களும் பொதுஜன கிஸான் இயக்கத்தை வலுவாகக் கட்டி வந்தார்கள். அங்கத்தினர் சேர்த்து முடிந்தபிறகு தேர்தல் நடந்தால் தன் தலைமைப் பதவி தூக்கி எறியப்படும் என்பதை ரெங்கா அறிவாராதலால்தான் இந்தக் கோணல்மாணல் வேலைகளிலெல்லாம் இறங்கினர். அகில இந்திய கிஸான் சபா இதைக் கண்டித்து மறுக்கவே, ரெங்காவின் மாகாணக் கமிட்டி வெளியேறி அகில இந்திய கிஸான் சபாவில் தன் சம்பந்தத்தை அறுத்துக் கொண்டது. இந்த ரகசியம் வெளியாகாமலிருப்பதற்குதான் ரெங்காவின் மாகாணக் கிஸான் சபா அகில இந்திய கிஸான் சபாவின் "தேச விரோத"க் கொள்கையின் காரணமாகத்தான் வெளியேறியதாக பறைசாற்றியது. ஆகஸ்டு கலவரங்களிலிருந்து நாசவேலைகள் மூலம் காங்கிரஸ் தலைமைப் பதவியைக் கைப்பற்ற விரும்பிய அவர் தலைவர்கள் விடுதலைக்கும், காங்கிரஸ்-லீக் ஒற்றுமைக்கும், உணவுப் பிரச்சினையைத் தீர்ப்ப

தற்கும் போராடி வரும் அகில இந்திய கிஸான் சபாவுக்குள் எப்படி இருந்துகொண்டு தன் காரியத்தைப் பூர்த்தி செய்ய முடியும். இந்தப் பாதையின்மூலம் நாம் கிஸான் மத்தியில் நாளுக்கு நாள் பலப்பட்டுக்கொண்டு தேசிய இயக்கத்தை முன்னுக்குக் கொண்டு போக முடிகிறது. நாச வேலை செய்யவும் காங்கிரஸைக் கைப்பற்ற முடியாதாகையால்தான் அகில இந்திய கிஸான் சபாவிலிருந்து ரெங்கா ராஜிநாமா செய்தார்.

## போட்டிக் கிஸான் சபா மூலம் ரெங்காவின் பிளவு வேலை

அவரது நாசவேலைத் திட்டம் காங்கிரஸ்காரர்களின் காதில் ஏறவில்லை என்பதைக் கண்டார். உடனே காங்கிரசின் பெயரால் போட்டி ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதின்மூலம் மக்களின் இயக்கங்களை உருக்குலைத்துப் பிறகு காங்கிரசுக்குள் தனக்கு செல்வாக்கையும், பின்பற்றும் கும்பலையும் ஏற்படுத்திக்கொள்ள விரும்பினர். ஏனென்ருல் நாச வேலைகள்மூலம் காங்கிரஸைக் கைப்பற்றும் திட்டம் தவறிவிட்டது. அவருடைய விடுதலைக்குப் பிறகு மூன்று மாதம் அவர் கிஸான் உலகத்தின் மத்தியில் பெரிய ரகளையை ஏற்படுத்திவிட்டார். விவசாயிகளுக்குத் தனியாக வர்க்க ஸ்தாபனங்கள் வேண்டுவதில்லை; தனிக் கொடி வேண்டியதில்லை. குறிப்பாக செங்கொடி கூடவே கூடாது என்பவை தான் அவரது புதிய ஞானோதய கோஷங்கள். இதைப் பலப்படுத்த சோவியத் யூனியனில் கிஸான்கள் சுரண்டப்படுகிருர்கள் என்றெல்லாம் சோவியத் எதிர்ப்புப்பிரசாரத்தில் இறங்கினர். தேசபக்தர்களும், கிஸான் ஊழியர்களும், கிஸான் உலகமும் அவரையும் அவரது கோஷங்களையும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

கிஸான் இயக்கம் அதன் ஆரம்பதிசையிலேயே பலமான எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருந்தது. ஜமீந்தார்களும், அரசாங்கமும், நிலச்சுவான்களும் கிஸான் இயக்கம் ஏற்படாமல் எவ்வளவோ எதிர்த்தார்கள். சில காங்கிரஸ்காரர்களும் அதன் அவசியத்தை சந்தேகித்து அதை எதிர்க்கவும் செய்தார்கள். கிஸான்களின் பிறப்புரிமையே மறுக்கப்பட்டது ஆனல், 1937ல் தான் அப்போது காங்கிரஸ் தலைவராயிருந்த நேரு கிஸான் சபா ஆரம்பிப்பதை ஆதரித்து விடுத்த நீண்ட அறிக்கையில், "கிஸான்கள் தனி வர்க்க ஸ்தாபனம் வைத்துக் கொள்ளக்கூடாதென்று சொல்வது காங்கிரசின் லக்ஷியத்துக்கும், வெளியிட்டிருக்கும் கொள்கைக்குமே விரோதம். கிஸான் சபாவை மறுப்பது மக்களியக்கத்தின் ஓயாத இதயத் துடிப்பையும், அவர்களின் உணர்ச்சியையும் மறுப்பதாகும். கிஸான் சபா காங்கிரசின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்றும் ஒவ்வொரு கிஸான்சபா அங்கத்தினரும் காங்கிரசிலும் அங்கத்தினராயிருக்கவேண்டும் என்று

சொல்வதும் தவறு. காங்கிரசுக்குள்ளேயே இருப்பதாயிருந்தால் பிறகு கிஸான் சபாவுக்குதான் என்ன அவசியம்? அகில இந்திய சர்க்கா சங்கம் போன்று, அல்லது குடிசைத் தொழில் சங்கம் போன்று நான் கிஸான் சபாவைச் செய்துவிட முடியாது. இவைகளுக்கான சட்டத்தை கிஸான் சபாவுக்கும் புகுத்தினல் கிஸான் சபாவுக்கும் காங்கிரசுக்கும் உள்ள வித்தியாசங்களை அதிகப்படுத்தி காங்கிரசின் பெயரில் அவநம்பிக்கையை வளரச் செய்யும்." மீண்டும் கூறுகிருர்: "தொழிலாளிகளும் கிஸான்களும் அவர்களது தனி ஸ்தாபனங்களை ஏற்படுத்திக்கொள்வது அவர்களின் பிறப்புரிமை. அது அவர்களுக்கு இன்றியமையாதது. இந்த ஜீவாதார உரிமை காங்கிரசால் திரும்பத் திரும்ப ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையின்பேரில் விவாதத்துக்கே இடமில்லை."

1938-ல் ஹரிபுராவில் கிஸான்கள் தங்கள் தனி ஸ்தாபனங்களை ஸ்தாபித்துக்கொள்ளும் உரிமையைக் குறிப்பிட்டு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் தனியாக கிஸான் ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதை எதிர்த்தவர்களில் ரெங்காவும் ஒருவர். 1928-ல் ஆந்திர மாகாண கிஸான் சபாவும், 1935-ல் அகில இந்திய கிஸான் சபாவும் உருவாகி மகத்தான் சேவைகள் செய்து கிஸான் இயக்கத்தின் சரித்திரத்தை சிருஷ்டித்துக்கொண்டு வரும்போது இந்த கிஸான் சபாவை அழிக்கவும், காங்கிரசுக்குள் கிஸான் சபாவை ஏற்படுத்தவும் முயற்சிக்கும் ரெங்காவின் எண்ணந்தான் என்ன? இம்முயற்சிகளின் பலன் என்னவாகும்? கிஸான் சபா ஒரு வர்க்க ஸ்தாபனம். அரசியல் கட்சியல்ல. அதனுள் பலதரப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் இடமுண்டு. பல அரசியல் கக்ஷிகளைச் சேர்ந்தவர்கள், பல மதஸ்தர்கள், ஏழை, பணக்கார கிஸான்கள் எல்லோரும் இருக்கிருர்கள். உதாரணமாக ஆந்திரா, வங்காளம், பஞ்சாப் மாகாணங்களில் கிஸான் இயக்கத்தில் காங்கிரஸ், லீக், கம்யூனிஸ்டு, ஹிந்து மகா சபா கட்சிக்காரர்களும், சீக்கியர், ஹிந்து-முஸ்லிம் முதலிய பலதரப்பட்ட மக்களும் சேர்ந்திருக்கிருர்கள். அதனல்தான் ஒரு ஐக்கிய அகில இந்திய கிஸான் இயக்கத்தைக் கட்ட முடிந்தது. அந்த மகத்தான வேலை பூர்த்தி அடைந்த பிறகு ரெங்கா இந்த கோஷங்களை கிளப்புகிருர். வேறென்றுமில்லை; கிஸான் இயக்கத்தை தகர்த்து சீர்குலைத்துக் கிஸான்களின் முன்னேற்றத்தைத் தடுத்து தேசிய இயக்கத்தில் பிளவுகளை ஏற்படுத்தத்தான்.

காங்கிரஸ்காரர்களைத்தான் கிஸான் சபாவில் சேர்க்கவேண்டுமென்ற அவர் கோஷத்தை ஒப்புக்கொண்டால் வங்காளத்தில்

லக்ஷக்கணக்கான முஸ்லிம்களும், மகாராஷ்டிரத்தில் ஆயிரக் கணக்கான ஹிந்து மகாசபைக்காரர்களும் காங்கிரசில் சேரத் தயங்குவர்; அதுவுமன்னியில் பொருளாதாரப் போராட்டத்துக்கு தயாராக விழிப்படைந்திருக்கும் இதர கிஸான்களேயும் கிஸான் சபாவிலிருந்து விரட்டி அகில இந்திய கிஸான் சபாவை குட்டிச்சுவராக்குவதில்தான் கொண்டுபோய்விடும். அது மாத்திரமல்ல, காங்கிரஸ் கிஸான் சபா, லீக் கிஸான் சபா, ஹிந்து மகாசபைக் கிஸான் சபா, கம்யூனிஸ்டு கிஸான் சபா, ஜஸ்டிஸ் கிஸான் சபா என்ற பல கிஸான் சபாக்கள் ஏற்படும். கிஸான் நலத்தை விரும்பும் எவரும் இதை விரும்பமாட்டார்கள். அரசியல் கட்சிகள் ஒன்றின் குரல் வளேயை ஒன்று நெரித்துக்கொண்டு சண்டைகள் போட்டபோது கிஸான் இயக்கம்தான் மக்களுடன் சேர்ந்து போராடிப் பஞ்சத்தினின்றும், பிணியினின்றும் அவர்களேக் காப்பாற்றியது.

இன்று ஆந்திராவில் 2,000 கிராமங்களுக்கு நன்மை பயக்கும் இனும் சட்டம், நீர்ப்பாசனச் சட்டம், சாகுபடிக்குத் தரிசு நிலம், லக்ஷக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள உரம், கருவிகளேயும் விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்க நம்மால்முடிந்தது. இந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்ய சாத்தியமாகத்தானிருந்தது. இன்று பலதரப்பட்ட அரசியல் அபிப்பிராயமுடைய 1,70,000 அங்கத்தினர்கள் ஆந்திர மாகாண கிஸான் சபையில் அங்கத்தினர்களாகயிருக்கிருர்கள்.

ரெங்காவின் கொள்கையைக் கையாண்டிருந்தால் கிஸான் இயக்கத்துக்கு வருங்காலமே இருந்திருக்காது; தேசிய இயக்கமும் பலஹீனமடைந்திருக்கும். ஒரு வர்க்க ஸ்தாபனத்துக்குள் சண்டை போட்டுக்கொண்டிருக்கும் பல கோஷ்டிகள் எப்படி தேசிய இயக்கத்தைப் பலப்படுத்த முடியும்? அல்லது, சுதந்திரப் பாதையில் முன்னேற இருபெரும் அரசியல் ஸ்தாபனங்களினிடையே எப்படி ஒற்றுமை ஏற்படுத்தமுடியும். ஒவ்வொரு வர்க்க ஸ்தாபனத்தின் லக்ஷியமும், பொதுஜன இயக்கங்களின் லக்ஷியமும் அதனதன் வர்க்க அடிப்படையின் ஒற்றுமையைப் பாதுகாப்பதாகவும், சுதந்திரப் போராட்டத்துக்கு முடிந்த வரையில் உதவி செய்வதாகவும் இருக்கவேண்டும்.

கிஸான்களுக்குத் தனி வர்க்க ஸ்தாபனம் தேவை இல்லே என்று கூறும்போது ரெங்கா கிஸான் வர்க்கத்திற்கு சதிசெய்கிருர். சுயேச்சையான வர்க்க ஸ்தாபனமாகவும்,-தேசத்தில் ஒரு பெரிய அரசியல் சக்தியாகவும் வளர்ந்துவரும் கிஸான் இயக்கத்தைத் தடுப்பதின் மூலம் துரோகம் செய்கிருர். தினே தினே வளர்

ந்து முன்னேறிவரும் புரட்சிகரமான கிஸான் இயக்கத்தின் முதுகில் குத்துவதல்லவா இது? 1942ல் நம்மை வீழ்த்த அவர் செய்த சதிச் செயல்களை கிஸான் உலகம் மறக்கமுடியுமா?

## கிஸான் கொடிக்கு ரெங்காவின் ஆக்ஷேபம்

உலகம் பூராவும் அடக்கப்பட்டுக் கிடக்கும் மக்களுடைய கொடியாக செங்கொடி அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் தொழிலாளிகளின் சர்வதேச ஒற்றுமையைக் குறிக்கும் சின்னம் அது. 1937 அக்டோபர் 27-28 தேதிகளில் இதே ரெங்காவின் தலைமையில் அகில இந்திய கிஸான் சபா செங்கொடிதான் கிஸான் இயக்கத்தின் கொடி என்றும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் கிஸான்களின் ஒற்றுமையைக் குறிப்பிடுவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நேருஜியும் செங்கொடிதான் தொழிலாளிகள்—விவசாயிகள் வர்க்கச் சின்னமென்பதையும் தொழிலாளிகள், விவசாயிகளின் ஒற்றுமையைக் குறிப்பதென்பதையும் ஒப்புக்கொண்டார்.

இந்தியக் கிஸான் இயக்கம் செங்கொடியைத் தன் வர்க்கச் சின்னமாக அங்கீகரித்திருக்கிறது. நமது தேசத்தில் ஆயிரக்கணக்கான கிராமங்களில் இக்கொடி இன்று பறக்கிறது. லக்ஷக்கணக்கான கூட்டங்களிலும், மகாநாடுகளிலும் அது பிரமாதமாகக் கருதப்படுகிறது. இதே கொடியின் கீழ்தான் கே. சத்தியநாராயண மூர்த்தியின் தலைமையில் 2000 மைல்கள் தூரம் நடந்து இந்த கிஸான் இயக்கத்தை ஆரம்பித்தோம். முனகாலா, காசிப்பட்டணம், மண்டசாப் போராட்டங்கள் இந்த செங்கொடியின் கீழ்தான் நடத்தப்பட்டன. செங்கொடி தாழாமல் பறப்பதற்கும், செங்கொடியின் லக்ஷியங்களைப் பாதுகாப்பதற்கும் பல கிஸான் புத்திரர்கள் தங்கள் ரத்தத்தை சிந்தியிருக்கிறார்கள். செங்கொடியைப் புறக்கணிப்பதென்பது கிஸான் வர்க்கத்தின் நலன்களுக்காக நடக்கும் போராட்டத்தையே புறக்கணிப்பதாகும்; இருந்தும் ரெங்கா அந்த செங்கொடியைக் கைவிடச் சொல்லுகிறார்.

## சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரம்.

ரெங்கா இத்துடன் நின்றுவிடவில்லை. சோவியத் யூனியனின் சாதனைகளைப் புகழ்ந்துகொண்டிருந்த ரங்கா 1945ல் திடீரென்று சோவியத் யூனியனில் கிஸான்கள் சுரண்டப்படுகிறார்களென்றும், தங்களுடைய ஸ்தாபனங்கள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை என்றும் பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார். 27 வருஷ காலம் ஹிட்லர் கோஷ்டியும், முதலாளிவர்க்கமும் முயற்சி செய்து படுதோல்வியடைந்த சோவியத் எதிர்ப்புப் பிரச்சார

வேலையை நமது பேராசிரியர் மேற்கொண்டிருக்கிறார். தற்கால வெற்றிகளைப் பார்த்து உலகமே சோவியத் யூனியனைப் புரிந்து கொண்டு மெச்சுகிறது. அந்த மகத்தான தேசத்தைப்பற்றி ரெங்கா இன்று மாசுகற்பிக்கப் பார்க்கிறார்.

---

# கிஸான் சபைகள்: காந்திஜி - ரெங்கா சம்பாஷணை

அகில இந்திய கிஸான் சபாவுக்குப் போட்டியாக வேறொரு ஸ்தாபனம் ஆரம்பிக்கும்படி காந்திஜி தனக்கு ஆசி அளித்திருப்பதாகச் சொல்லி சமீபத்தில் ரெங்கா தேசத்தில் ஒரு பெரிய அரசியல் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டார். பேச்சு வார்த்தைகளின் சில பகுதிகளைமாத்திரம் பிரயோசனப்படுத்திக்கொண்டு குழப்பம் ஏற்படுத்தினதால் அவசியத்தை முன்னிட்டுக் காந்திஜி—ரெங்கா கடிதப்போக்குவரத்து பூராவையும் பியாரிலால் வெளியிட்டபொழுது தனது பிளவு நடவடிக்கைகளுக்கு அனுசரணையாக காந்திஜியின் பெயரை உபயோகப்படுத்தி காங்கிரஸ்காரர்களின் ஆதரவை ரெங்கா நாடுகிறார் என்பது தெளிவாயிற்று. அதனால்தான் 15-12-44ல் தனது "ஜமீன் ரயத்தில்" பேச்சுவார்த்தை சம்பந்தமான பூராவிவரங்களையும் பரிசிலனை செய்யமுடியாது என்று எழுதினார். 9-12-44ல் ஆந்திரப் பிரபா பத்திரிகையில் ரெங்கா வெளியிட்ட அறிக்கையைப் பார்க்கும்போது காங்கிரஸ்காரர்களைமாத்திரம் சேர்த்துக்கொள்ளும் அகில இந்திய கிஸான் சபாவுக்குப் போட்டி ஸ்தாபனத்தை ஆரம்பிக்க காந்திஜி அனுமதி அளித்துவிட்டார் என்றுதான் எவருக்கும் தோன்றும். உண்மையில் பேச்சுவார்த்தைகளின் பூராவிவரங்களையும் பார்க்கும்போது அது உண்மையல்லவென்றும் அந்தப் பிரச்சினையே பேச்சு வார்த்தையின்போது எழவில்லை என்பதும் நன்கு தெரிகிறது. அகில இந்திய கிஸான் சபாவைப்பற்றியே ரெங்கா பிரச்சினை ஏதும் ஆரம்பித்ததாகத் தெரியவில்லை. ஆனால், தன் அறிக்கைகள் ஒவ்வொன்றிலும் ஜனங்களிடம் பச்சையாகப் புளுகுவதற்குத் தயங்கினாரில்லை. காந்திஜியின் பெயரால் ஏன் இம்மாதிரி அபாண்டப் பிரச்சாரம் செய்யவேண்டும்? தனது போட்டி சட்டைப் பை அகில இந்திய கிஸான் காங்கிரஸுக்குக் காங்கிரஸ் காரர்களின் ஆதரவைப்பெற்று அதற்கு உருவமும், உயிரும் உண்டு

பண்ணத்தான். அப்படிச் செய்யாவிட்டால் தன்னைக் கவனிப்பார் யாரும் கிடையாதென்பது அவருக்குத் தெரியும்.

ஒவ்வொரு கூட்டத்திலும், அகில இந்திய கிஸான்சபா 1942ல் காங்கிரஸைப் பின்புறமாகத் தாக்கிவிட்டதென்றும், அதனால்தான் தான் ராஜிநாமா செய்துவிட்டதாகவும் ஜம்பமடிக்கிறார். இது உண்மையானால் இந்தப் பிரச்சினையை காந்திஜியிடமே கிளப்புவதுதானே. 1942ல் காங்கிரஸால்தான் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது என்று காந்திஜியிடம் கூற அவருக்கு நெஞ்சழுத்தம் இல்லை.

ஆந்திரா சம்பந்தப்பட்டவரையிலாவது போட்டி கிஸான் சபா ஏற்படுத்துவதை காந்திஜி அங்கீகரித்தார் என்ற விஷயமே விளக்கப்படவேண்டும். பொதுவாகவே போட்டி கிஸான் சபா ஆரம்பிப்பதைக் காந்திஜி ஆதரிக்கவில்லை. ஆனால் ரெங்கா காங்கிரஸுக்குள்ளேயே ஒரு கிஸான் சபா ஆரம்பிப்பதில் தப்பொன்றுமில்லை என்று விவாதித்தார். அதுவுமன்றி 1929 வருஷத்தில் நடந்ததைப்போல்தான் இந்தத் தடவை காங்கிரஸைக் கைப்பற்றுவதற்கல்லவென்றும், காங்கிரஸ் அங்கத்தினர்களை மாத்திரம் தான் சேர்க்கப் போவதாகவும் ஒப்புக்கொண்டார். காங்கிரஸ் அங்கத்தினர்களைத்தான் சேர்ப்பதென்றால் தனியாக ஒரு ஸ்தாபனம் எதற்கு என்று காந்திஜி கேட்டார். சிலர் காங்கிரஸில் மாத்திரம் சேர்வதென்பதைப்பற்றி சந்தேகிக்கிறார்கள் என்றும், அரசியலில் காங்கிரஸின் தலைமையை ஒப்புக்கொண்டு பொருளாதார முன்னேற்றத்துக்கும் பாடுபடவேண்டுமென்றும் ரெங்கா கூறினார். வேறுவிதமாக காங்கிரஸ்காரர்களின் ஒத்துழைப்பு கிடைக்காது என்பதைக்கண்ட அவர் காங்கிரஸின் அரசியல் தலைமைப்பதவியின் கீழிருப்பதாக சம்மதித்தார்.

ரெங்கா எப்படியாவது தன் தலைமைப் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் முயற்சி செய்கிறார் என்பது நன்குதெரிகிறது அதனால்தான் காந்திஜி, "காங்கிரஸின் தலைமையில் ஒரு தனி ஸ்தாபனம் ஏன் ஏற்படுத்தவேண்டுமென்பது எனக்குப் புரியவில்லை. இது கிஸான்களிடையே குழப்பத்தைத்தான் ஏற்படுத்தும். நீங்கள் அம்மாதிரி வேறு ஸ்தாபனங்கள் வேண்டுமென்று நினைத்தால் அவைகள் காங்கிரசுக்கு வெளியே இருப்பதுதான் நல்லது.

"காங்கிரஸ் தலைமைப் பதவியின் கீழேயே ஒரு தனியான கிஸான் ஸ்தாபனம் ஏற்படுவதை ஆக்ஷேபிப்பதற்காக, இஷ்டப்படும் சில காங்கிரஸ்காரர்கள் செல்வாக்கில் வேறு ஸ்தாபனம் தனியாக அமைத்துக்கொள்ளட்டுமே" என்று காந்திஜி கூறுவதை நாம் ஒப்புக்கொள்ளமுடியாது. கிஸான் சபாவின் சுதந்திரத் தன்மையை காங்கிரஸ் ஒப்புக்கொண்டிருக்கிறது. ரெங்காவின்

எண்ணங்களை நன்குணர்ந்த காந்திஜி அவரைக் காங்கிரஸின் பெயரை உபயோகப்படுத்திக்கொள்ள அனுமதிக்கவில்லை என்பது தான் முக்கியமான விஷயம்.

ரெங்கா எப்படியாவது காந்திஜியின் சம்மதத்தைப் பெற விரும்பினார். "காங்கிரஸுக்குள் நாங்கள் எந்தப் பதவியையும் பிடித்துக்கொள்ளமாட்டோம். ஆமதாபாத் மில் தொழிலாளிகளை நடத்துவதைப்போல் எங்களை ஏன் நீங்கள் நடத்தக்கூடாது?" என்றுகேட்டார்.

நாங்கள் தனி ஸ்தாபனத்தை ஆரம்பித்தபோதிலும் காங்கிரஸின் கட்டுப்பாட்டுக்கு அடங்கி காங்கிரஸ் தலைமைப் பதவியைப் பின்பற்றுவோம் என்றெல்லாம் சொல்லிப்பார்த்தார். காந்திஜி, "என்னுடைய பயத்தையும் சந்தேகங்களையும் கூறிவிட்டேன். அவைகளைப் போக்கவேண்டியது உங்கள் கடமை. ஆமதாபாத் தொழில் சங்கத்தைப்போன்று நீங்கள் ஒரு தனி கிஸான் சபாவை "ஆந்திராவில்" மாத்திரம் ஆரம்பிக்கவேண்டும். அங்கத்தினர் சேர்ப்பதானது காங்கிரஸின் கொள்கைகளில் அவர்களுடைய நம்பிக்கையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடனும், அவர்களின் அரசியல் உணர்ச்சி அபிவிருத்தி அடையும் விதத்திலும் இருக்க வேண்டும்" என்று பதிலளித்திருக்கிறார். ரெங்காவினால் இது ஒரு தனி ஸ்தாபனம் என்று சொல்லிக்கொண்டு திரியமுடியவில்லை. மற்றும் அந்த கிஸான் சபாவையும் ஆந்திராவில் மாத்திரந்தான் ஆரம்பிக்கமுடியும். காந்திஜியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் இவ்வளவு விஷயங்கள் தெளிவாக்கப்பட்டிருந்தும், காந்திஜி தனக்கு ஒரு தனிப்பட்ட அகில இந்திய கிஸான் சபா ஆரம்பிக்க உத்திரவு கொடுத்துவிட்டார் என்று சொல்லிக்கொண்டு திரிய எவ்வளவு தைரியமிருந்திருக்கவேண்டும். காந்திஜியை இரண்டாவது தடவை சந்தித்தபொழுது காந்திஜியின் நிபந்தனைகளை மாற்றுவதற்கு முயற்சித்தார். கிஸான் கவுன்ஸில்களில் மூன்றிலொரு பங்கு அதே அந்தஸ்துள்ள (மாகாண, ஜில்லா அல்லது தாலூக்கா) காங்கிரஸ் கமிட்டிகளிலிருந்தும், மூன்றிலொரு பகுதி கிராமக் காங்கிரஸ் கமிட்டிகளிலிருந்தும், மீதி மூன்றிலொரு பகுதி காங்கிரஸை எதிர்க்காத மீதமுள்ளவர்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் என்று கூறினார். இது கிஸான் பிரதிநிதிகளைத் திருப்திசெய்யும் என்பது அவர் நினைப்பு. அவரின் சிஷ்யர்களை கிஸான் கவுன்ஸிலில் கொண்டுவந்து அவரைப் பலப்படுத்திக்கொள்ளத்தான் என்பதை அவர்கள் உணரமாட்டார்களென்று எதிர்பார்த்தார். தன் தனிப்பட்ட செல்வாக்கைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகப் புரட்சிகரமான கிஸான் இயக்கத்தைத் துண்டாட கொஞ்சம்கூட தயக்கமன்றி

யில் எவ்வளவு வெட்கங்கெட்ட முறையில் வேலைசெய்ய முன் வந்துவிட்டார். ஆகவே, காந்திஜி முதல் ஏற்பாட்டின்படியே நடக்கும்படி கூறிவிட்டார்: அதாவது காங்கிரஸ் அங்கத்தினரைத் தான் கிஸான் அங்கத்தினராக்குவது; பொருளாதாரப் போராட்டத்தை மாத்திரம் தான் நடத்துவது. ரெங்கா மறுபடியும் தனது குரலை மாற்றிக்கொண்டார். இரண்டு கிஸான் சபாக்கள் இருப்பதைக் கண்டு காங்கிரஸ்காரர்கள் சந்தேகப்படுவதால் தான் தனியாக ஒரு கிஸான் சபா அமைக்க முடிவு செய்திருப்பதாகக் கூறினார். கிஸான் கவுன்ஸிலில் மூன்றில் ஒரு பகுதி காங்கிரஸுக்கும், மூன்றிலொரு பகுதி கிராமக் காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் பிரதிநிதித்துவம் கொடுப்பதாகச் சொல்லும் இந்த ஜால வித்தைகளெல்லாம் தனது போட்டி கிஸான் சபாவுக்கு காங்கிரஸின் 'லேபிள்' பெறுவதற்காகத்தான் என்பது தெரியும். மேலும், "காங்கிரஸே கிஸான் சபாவாகவும் செய்யப்படவேண்டும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. நாங்கள் பயப்படுவதெல்லாம் சில செல்வாக்குள்ளவர்களால் உரிமைகள் பறிக்கப்படுவோமோ என்பதுதான். பிர்லாவைப்போன்றவர்கள் தங்களை அதிதியாக ஏற்றுக்கொள்ளும்போது நீங்கள் அவைகளை ஏற்றுக்கொள்கிறீர்கள். ஆகவே, எந்த மாறுதல்களும் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் இருக்கமுடியாது. வருத்தமளித்தபோதிலும் நான் தங்கள் ஏற்பாடுகளை ஒத்துக்கொள்ளமுடியாது" என்று கூறும்போது காந்திஜியிடம் பச்சையாகப் புளுகி யிருக்கிறார். உடனே 15-12-44ல் தன் "ஜமீன் ரயத்" பத்திரிகையில், "காந்திஜி காங்கிரஸை கிஸான் சபாவுடன் வைத்துக்கொள்ள விரும்புகிறார். ஆனால் இது சாத்தியமில்லை. எல்லாப் பகுதி மக்களுக்கும் காங்கிரஸ் தலைமை தாங்கவேண்டி யிருக்கிறது. அதுவும் அல்லாமல் வர்க்க உணர்ச்சி உள்ளவர்கள் இதை விரும்பவு மாட்டார்கள். ஆனால், கிஸான் சபா சுதந்திரப் போராட்டத்தில் காங்கிரஸைப் பலப்படுத்தி உதவி செய்யமுடியும். ஆகவே, காங்கிரஸை எல்லாவழிகளிலும் ஆதரிக்கக்கூடிய ஒரு அகில இந்திய கிஸான் சபா அவசியம். என்னுடைய இந்த யோசனைக்குக் காந்திஜி சம்மதமளித்திருக்கிறார்," என்று எழுதி யிருக்கிறார். விஷயங்களை சந்தர்ப்பத்துக்கேற்றமுறையில் திரித்து கூறுவதில் ரெங்கா எவ்வளவு சமர்த்தர் என்பது தெரியும். தான் காந்திஜியிடம் சொன்னவைகளைத் தன் பத்திரிகையின் மூலம் ஜனங்களுக்குச் சொல்லாமல் மறைக்கிறார். இங்கே சொல்லுவதை அங்கே காந்திஜியிடம் சொல்லவில்லை. "காங்கிரசைக் கைப்பற்றுவதற்கு உங்கள் கிஸான் சபாவை நீங்கள் ஆரம்பிக்கவில்லையா?" என்று காந்திஜி குறிப்பிட்டதற்குத் தான் 1929லேயே அந்த எண்

னத்தைக் கைவிட்டுவிட்டதாக ஒப்புக்கொண்டார். ஆனால் அவர் 1934 வரையில் அவர் செய்த பிளவு வேலைகளையும், காங்கிரசைக் கைப்பற்றும் முயற்சியையும் கைவிடவில்லை என்பதை எந்தக் காங்கிரஸ்வாதியும் மறந்திருக்க முடியாது. அவருடைய அந்தப் போக்கை மறுத்தது கிஸான் இயக்கம்தான். அகில இந்திய கிஸான் சபா, தொழிற்சங்க காங்கிரஸ், மாணவரியக்கம் முதலிய எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கங்களும் சுதந்திரப் போராட்டத்தில் காங்கிரசை ஆதரித்து நின்றன. 1938ம் வருடத்தில்கூட "கிஸான் காங்கிரஸ்' லிருந்து எடுத்து முன்னதாகவே காட்டியிருக்கும் மேற்கோளிலிருந்து, அவர் காங்கிரஸ் கமிட்டிகளைக் கைப்பற்றுவது காங்கிரஸ் தலைமைப் பதவியை மாற்றுவது என்ற கொள்கையில்தான் வேலை செய்தார் என்பது விளங்கவில்லையா? இதைப் பூர்த்தி செய்ய கிசான்கள் தங்களின் எல்லா சக்திகளையும் சேகரிக்க வேண்டுமென்பது அவரது விருப்பம். 1938ல் அம்மாதிரி பேசிவிட்டு 1929லேயே அந்த நோக்கத்தைத் தான் கைவிட்டுவிட்டதாக ஜனங்கள் நம்பவேண்டுமென்று விரும்புகிறார்.

1942ல் நாசவேலைகளில் அவர் இறங்கியபோது வெகுநாளாக எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் வந்துவிட்டதென்றும், காங்கிரஸ் இயந்திரம் தன் மடியில் வீழ்ந்துவிடுமென்றும் நினைத்தார். அவர் உபதேசங்களைக் கேட்க ஆளில்லாததால் கடப்பைக் காங்கிரஸ் காரர்களிடம் தண்டவாளங்களைப் பெயர்த்தெறிவது, தந்திக்கம்பி அறுப்பது காந்திஜியின் கட்டளை என்று பொய் சொன்னார்.

ஆந்திராவில் உள்ள ஒவ்வொரு காங்கிரஸ்காரருக்கும் அவரது திருவிளையாட்டைப்பற்றி இருபது வருடமாகத் தெரியும். இன்று கிஸான் காங்கிரசை ஆரம்பிப்பதின் மூலம் அவைகளோடு சேர்ந்தாற்போல் ஒரு புதிய திருவிளையாட்டைதான் ஆரம்பித்திருக்கிறார். பியாரிலால் பூரா விவரங்களையும் வெளியிட்டதின் மூலம் அவரது திருவிளையாடல் அம்பலமானபோது மறுபடியும் வார்தாவுக்கு ஓடினார். மறுபடியும் அவர் என்ன சூழ்ச்சிகளைக் கையாண்டார் என்பதை நாம் கவனமாகப் பார்க்கவேண்டும்.

எங்களின் சகோதரக் காங்கிரஸ்காரர்களிடம் நாங்கள் ஒரு வேண்டுகோள் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆந்திராவில் ஒரு கிசான் சபாவை ஆரம்பிக்க காந்திஜி ரெங்காவுக்கு சம்மதம் தெரிவித்திருக்கிறார் என்று அவர்கள் நினைக்கலாம். ஆனால் 1,75,000 அங்கத்தினர்களைக்கொண்ட ஆந்திர மாகாண கிசான் சபாவைப்பற்றியோ அல்லது எல்லா மாகாணங்களையும் தழுவி நிற்கும் கிஸான் இயக்கத்தைப்பற்றியோ, அவரிடம் ஏதாவது கூறப்பட்டதா? தன் சொந்த நன்மையை உத்தேசித்து ரெங்கா

அப்பேற்கொத்த அகில இந்திய இயக்கத்திலின்றும் முறித்துக் கொண்டு ஏன் வந்தார் என்பதைப்பற்றி ஏதும் கூறப்பட்டதா? அப்படி யெல்லாம் விஷயங்கள் விளக்கப்படாமலிருந்தும் ஆந்திரா வில் மாத்திரம் பல நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரு கிசான் சபாவை ஆரம்பிக்க காந்திஜி ரெங்காவுக்கு அனுமதி அளித்திருக்கிறு ரல்லவா? ஆந்திராவில் ஒரு போட்டி கிஸான் சபாவை ஆரம்பிப் பது கிசான் இயக்கத்தைத் தகர்ப்பதாகும். இந்த முயற்சிக்கு உடந்தையாயிருப்பது கிஸான் இயக்கத்தின் வீழ்ச்சிக்கே உடந் தையாயிருப்பதாகும். இது காங்கிரஸைப் பலப்படுத்தாமல் பல ஹீனத்தைத்தான் ஏற்படுத்தும். ஆகவே, ரெங்காவையும் காளேஸ்வர ராவையும் இந்த முயற்சியைக் கைவிடும்படி வற்புறுத்த நாங்கள் சக காங்கிரஸ்காரர்களைக் கேட்டுக்கொள்ளு கிறோம்.

---

# உணவுப் பிரச்சினை: ரெங்கா கோஷங்களின் வண்டவாளம்

யுத்தத்தை முன்னிட்டு அரிசி இறக்குமதி நின்றுவிட்டதாலும் தேசத்தின் விளைச்சலை சரிவர வினியோகிக்காததாலும், கள்ள மார்க்கெட்காரணமாகவும், வங்காளம், ஒரிஸ்ஸா, விசாகை முத லிய பிரதேசங்கள் கொடும் பஞ்சத்துக்காளாயின. இந்த மகத் தான ஆபத்தைத் தடுக்க கிஸான் இயக்கம் பலனுள்ள முறையில் கொள்முதல் திட்டமும் பங்கீடுதிட்டமும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கோரியது. இதை வெற்றிகரமாக நடத்த அர சாங்கம் மக்களின் ஒத்துழைப்பைப் பெறக்கூடிய கொள்கையை அனுஷ்டிக்கவேண்டுமென்று வற்புறுத்தியது. விற்பவர்கள், வாங்குபவர்கள் இருதரத்தாருடைய நலன்களையும் பாதுகாக்கும் முறையில் அரிசியின் விலையை மூட்டை ஒன்று பதினேறு ரூபா யாக நிர்ணயித்தது. கிஸான்களுக்குத் தேவையான இதர பொருள்களைக் கட்டுப்பாடு விலைக்கு அரசாங்கம் சப்ளை செய்ய வேண்டுமென்று கோரியது.

ஆனால், ரெங்கா போட்ட திட்டமென்ன? அது கஷ்டப்படும் ராயலசீமா மக்களுக்கோ, விசாகை மக்களுக்கோ எந்த வழியிலும் உதவி செய்கிறதாக யிருக்கிறதா? உணவுப் பிரச்சினையைத் தீர்க்க ஏதாவது வழி காட்டுகிறதா? இல்லவே இல்லை. நேர்

மாருக பிரச்சினையை இன்னும் மோசமாக்குவதாயும், ஜனங்களுக்குத் தீங்கிழைப்பதாயுந்தானிருக்கிறது. இதை நன்ருய்த் தெரிந்துகொள்வதற்கு அவரது சுலோகங்களை ஒவ்வொன்ருகப் பரிசிலனை செய்வோம்.

## பங்கீடும், கொள்முதலும்: ரெங்காவின் மழுப்பல்

டில்லி அஸெம்பிளிக் கூட்டத்துக்குப் போகும் வழியில் காசிபக்கா என்ற இடத்தில் நடந்த கூட்டங்களில் கலந்துகொண்டார். நகரங்களிலும் கிராமங்களிலும் பங்கீடு வேண்டுமென்று அங்கே பேசினர். போதாக்குறை ஜில்லாவாசிகளிடம் தினம் 40 துலாம் பங்கீடு போதாது 60 துலாம் வேண்டும் என்று பேசினர். அவரது சிஷ்யர்களோ அவரையும் மிஞ்சி 80 துலாம் வேண்டுமென்ருர்கள். கிருஷ்ணு, கோதாவரி, குண்டூர், நெல்லூர்போன்ற உபரி ஜில்லாக்களில் ஒவ்வொருவருக்கும் தலா 9 மூட்டை அரிசி சொந்த உபயோகத்துக்கும், 6 மூட்டை விவசாயத்துக்கும் ஒதுக்கப்பட்டு மீதம் கொள்முதல் செய்யப்படவேண்டுமெனக் கோரினர். இந்த முறை கையாளப்பட்டால் போதாக்குறைப் பிரதேசத்துக்கு எப்படி அரிசி வினியோகம் செய்ய முடியும். அதுவும் 80 துலாம் எப்படிக் கிடைக்க முடியும். அவருடைய சுலோகங்கள் ஒவ்வொரு இடத்திலும் தனித்தனியாகப் பார்க்கும்போது நியாயமானதைப்போன்று தோன்றும். ஆனல், எல்லாவற்றை சேர்த்துப் பார்த்தால் அதன் பொருத்தமற்ற தன்மையும், முரண்பாடும் வெட்டவெளிச்சமாகும். அதிகப்படியாகப் பார்த்தாலும் ஒரு தனி நபரின் சொந்த உபயோகத்துக்கு 5 மூட்டையும், இதர செலவுகளுக்கு மூன்று மூட்டையும்தான் வரும். முறையே 9 மூட்டைகளும், 6 மூட்டைகளும் கிஸான்களிடம் இருக்க அனுமதிக்கவேண்டும் என்று கோருவதின் மர்மம் என்ன? ஜனங்களுக்கான கொள்முதல் திட்டத்தை நாசம் செய்வதுதான். இது கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் விசாகை, ராயலசீமா மக்களைத் துரோகம் செய்வதாகாதா?

## பணப் பெருக்கத்தின் காரணமாக அதிக விலை

நெல் விலையைக் கட்டுப்படுத்தக்கூடாது; மற்ற சமான்கள் விலையேற்றத்துக்குத் தகுந்தாற்போல் ஏறவேண்டுமென்று விரும்புகிருர். முதலில் நெல் விலையை மூட்டை ஒன்று 12 ரூபாயாக நிர்ணயம் செய்யப்படவேண்டுமென்று விரும்பினர். ஆனல் 10-12-44ல் நெல்லூரில் நெல் உற்பத்தியாளர் மகாநாட்டில் "மற்ற சாமான்களின் விலை யேறும்வரையில் கள்ளமார்க்கெட் நிலவும்வரையில் நெல் விலையும் அதற்குத் தகுந்தாற்போல் ஏறத்

தான் வேண்டும்" என்று பேசியிருக்கிறர். நெல்லின் நியாயமான விலைக்குத் தகுந்தாற்போல் மற்ற சாமான்களின் விலையும் கட்டுப்பாடு செய்யப்பட வேண்டுமென்று சொல்லவில்லை. எல்லா தேச பக்தர்களின் உதவியுடனும் சரியான பங்கீடின் மூலம் கள்ளமார்க்கெட்டை ஒழிக்கவேண்டுமென்றும் விரும்பவில்லை. தற்காலம் நிலவி வரும் கள்ளமார்க்கெட்டைப்பற்றி காந்திஜி மனம் கலங்கவில்லையா? எல்லாத் தலைவர்களும் இம்மாதிரி கவலைப்பட்டு புத்தி மதி சொல்லும்போது இந்த தேசபக்தர் ரெங்கா மாத்திரம் நேர் எதிர்ப்பாதையில் செல்கிறர். கள்ளமார்க்கெட்டை எதிர்த்து தப்பித்தவறிக்கூட ஒரு வார்த்தை சொல்வது கிடையாது இந்த தேசபக்தர். நெல் விலையும் இதர சாமான்கள் விலையும் இவர் விரும்புவதைப்போல் போட்டி போட்டுக்கொண்டு ஏறினல் நிலைமை என்னவாகும்? இந்தப் பொருளாதாரப் பண்டிதர் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. உணவுப் பிரச்னையைத் தீர்க்கும் மார்க்கம் இதுதான்போலும்!

6-1-45ல் குடிவாடா நெல் உற்பத்தியாளர் சங்கத்தில் 1 மூட்டை நெல் விலை 12 ரூபாயக்கு நிர்ணயிக்கவேண்டுமென்று கூறி, அதே மூச்சில் குறைந்த விலையில் அரசாங்கத்தாரால் வாங்கி சாப்பிடும் ஜனங்களுக்கு சப்ளை செய்யப்படவேண்டுமென்றும் கூறினர். அதில் ஏற்படும் நஷ்டத்தை அரசாங்கம் ஈடு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார். இந்த சுலோகம் கேட்பதற்கு வெகு நன்ருய் பொருத்தமாயுமிருக்கிறது. ஆனல், இது அனுபவ சாத்தியமா என்பதைப் பரிசீலனை செய்தால் இதன் வண்டவாளம் தெரியவரும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஜனங்களின் வாங்கும் சக்தி மிகக் குறைந்து பஞ்சம் வரும் நிலைமை நெருங்கிக்கொண்டிருந்தால் அங்கு குறைந்த விலையில் ஜனங்களுக்கு வினியோகம் செய்வதென்பது சாத்தியமே. ஆனல், தேசம் பூராவும் பல இடங்களில் ஜனங்கள் பலவிதமான தானியங்களை உண்ணும் போது-நெல்லுக்கு அதிக விலையாக்க கிஸான்களுக்கு வேண்டுமென்பதற்காக அரசாங்கம் தானிய வினியோகம் செய்யவேண்டுமானல் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் செலவாகாதா? நமது தேசியப் பொருளாதாரம் அந்த அளவிற்கு வலுவுடையதா? ஆனல் நமது ரெங்கா அரசாங்கம் இன்னும் அதிகப்படியாக நோட்டுகளை அச்சிட்டு ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் பணப் பெருக்கத்தை அதிகமாக்க வேண்டுமென்று விரும்புகிறர் போலும்! இன்று ஏற்பட்டிருக்கும் பணப் பெருக்கத்தாலேயே எவ்வளவு கஷ்டங்கள் உண்டாகியிருக்கிறது என்பதை நாமறிவோம். அதிக நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவதின்மூலம் ஜனங்களின் வாங்கும் சக்தியை அதிகப்படுத்தலாம் என்று

நினைக்கும் முட்டாள்களுக்கும் ரெங்காவுக்கும் ஏதாவது வித்தியாசமுண்டா? இந்த அர்த்தமில்லாத பணப் பெருக்கம் திடீரென்று ஒரு பொருளாதாரச் சுணக்கத்தை சிருஷ்டித்து ஆயிரக்கணக்கான குடும்பங்களை சந்தியில் விட்டுவிடாதா. ரெங்கா இதை விரும்புகிறாரா? இம்மாதிரிதான் கிஸான்களின் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்யும் வழி இதுதான்போலும். இம்மாதிரியான வழிகளால் கிஸான்களைத் தன் பக்கம் இழுக்கலாமென்று நினைக்கிறார். கிருஷ்ணா நெல் உற்பத்தியாளர் சங்கத்தில் கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்: "வைஸ்ராய் தனது கல்கத்தா பிரசங்கத்தில் யுத்தம் காரணமாக பணப்பெருக்கம் 1945ல் அதிகமாகும் என்று கூறியிருக்கிறார். ஆகவே மற்ற சாமான்களின் விலை அதிகமாகும். இந்த நிலைமையின் கீழ் நெல் விலை மூட்டை ரூபாய் 12 என்பது போதாது. நெல் விலையும் அதிகப்படுத்தியாகவேண்டும்." 7-1-45ல் அல்லூரி மகாநாட்டிலும் அதே தீர்மானத்தைக் கீழ்க்கண்டவாறு நிறைவேற்றியிருக்கிறார்: "யுத்தம் முடியும்வரையில் பணப்பெருக்கமும், சாமான்களின் விலையும் அதிகரித்துக்கொண்டேபோகும். ஆகவே நெல் விலையும் அதற்கு தகுந்தாற்போல் ஏறிக்கொண்டேபோக வேண்டும்." ஒருபக்கத்தில் அதிகம் நோட்டுகளை வெளியிடுவதின் மூலம் அரசாங்கம் குறைந்த விலையில் மக்களுக்கு அரிசி வினியோகம் செய்யவேண்டுமென்று கூறுகிறார், மற்றொரு பக்கத்தில் மற்ற விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்தாற்போலும், பணப்பெருக்கத்திற்கு தகுந்தாற்போலும் நெல் விலையும் ஏற்றப்படவேண்டுமென்று கூறுகிறார். இந்த விஷச் சக்கரம் எங்கு போய் நிற்கும். இந்த நிலைமை அனுமதிக்கப்பட்டுக் கள்ளமார்க்கெட் வளர்ந்தால் அதனாலேற்படும் பொருளாதார சுணக்கத்தின் விளைவுகள் என்னவாகும். சீன மக்களின் துர்ப்பாக்கியம் நமக்கு சிறந்த எடுத்துக்காட்டாயிருக்கிறது. சீனாவில் 1937லிருந்து 1944க்குள் விலைவாசி 415 பங்கு ஏறியிருக்கிறது. சுங்கிங்கில் ஒரு ஹொட்டின் விலை ரூபாய் 650. ஜோடி பூட்ஸ் விலை ரூபாய் 250. பிராந்தி ஒரு பாட்டில் விலை ரூபாய் 2400. ஒரு பவுண்டு வெண்ணை விலை ரூ. 230. இதே நிலைமை இந்தியாவிலும் ஏற்படவேண்டுமென்று ரெங்கா விரும்புகிறாரா?

## விலையை உயர்த்த நெல்லை மறைப்பது

எட்குபல்லுவில் பேசும்போது நெல் விலையை அதிகரிக்க கீழ்வருமாறு வழி கூறுகிறார்: "தொழிலாளிகள் தங்கள் உரிமைக்காக வேலைநிறுத்தம் செய்யுங்கள். கவர்ன்மெண்டைப் பணிய வைப்பதற்கு கிசான்களிடம் இருக்கும் ஒரே ஆயுதம் தங்கள்

நெல்லை மறைப்பதுதான்.'' மறுபடியும் குடிவாடாவில் 6-1-45ல் கூறுகிறார்: ''நல்ல விலை கிடைக்காததற்குக் காரணம் உங்கள் பலஹீனம்தான். கிருஷ்ணாவில் ஏழு மில்கள் இருக்கின்றன. அவர்களுக்கு பயந்து அரசாங்கம் அவர்களின் கோரிக்கைகளை ஒப்புக்கொண்டிருக்கிறது. உங்களைத்தான் அரசாங்கம் விரட்டுகிறது. நீங்கள் உங்கள் மனதைத் திடப்படுத்திக்கொண்டால் லக்ஷக்கணக்கான கிஸான்களின் வழியில் யார் குறுக்கிடமுடியும்? வேலைசெய்ய நீங்கள் மறுத்தால் உங்களை வேலைசெய்யச் சொல்ல யாரால்முடியும்? ஆகவே, உங்களிடமிருக்கும் நெல் சேமிப்பை மறைத்து வைத்து அதிக விலை பெறுங்கள்!'' விசாகையில் மடிந்து கொண்டிருக்கும் சகோதரர்களுக்கும் ரெங்கா செய்யும் உதவியா இது? அல்லது போதாக்குறைப் பிரதேசத்தில் ஜனங்களுக்கு 80 துலாம் கிடைக்கச் செய்யும் வழியா? இதுதான் அரசியலா? இது தான் கிஸானுக்கு உதவி செய்யும் வழியா? ஆந்திர மாகாண கிஸான் சபாவின் பலத்தை முறிக்க எவ்வளவு சிரமப்பட்டு முயற்சிகள் எடுத்துக்கொள்கிறார்.

குடிவாடா பிரசங்கத்தில் அவர் சொன்ன புனிதமான புத்திமதியைப் பார்ப்போம்: ''பஞ்சாப் அரசாங்கம் மணங்கு ஒன்று ரூ. 13-8-0 ஆக நிர்ணயித்திருக்கிறது. அவர்களுக்கு மூட்டை ஒன்றுக்கு எட்டு ரூபாயிலிருந்து மூன்று ரூபாய் வரையில் ஆதாயம் கிடைக்கிறது!! இம்மாதிரி அவர் சொல்வதின் அர்த்தம் என்ன? இந்த விலை உயர்வின் லாபம் யாருக்குக்கிடைக்கிறது நிலச்சுவான்களுக்கும், ஜமீன்தார்களுக்கும், வியாபாரிகளுக்குந் தான் கிடைக்கிறது. சாதாரண ஜனங்களுக்கு இதிலிருந்த கிடைத்த நன்மை ஒன்றுமில்லை. பொறுப்பற்ற யூனியனிஸ்டு பிரபுக்கள் ஜனங்களின் நன்மையை உத்தேசித்து இதைச் செய்யவில்லை. வங்காளத்தில் லக்ஷக்கணக்கான சகோதரர்கள் செத்து மடிந்தபோது தங்கள் உபரி தான்யத்தை கள்ளமார்க்கெட்டுக்கு விற்பனை செய்ய பேரம் செய்து கொண்டிருந்த ராஜாங்கம் இந்த பஞ்சாப் யூனியனிஸ்டு அரசாங்கம். மத்திய அரசாங்கமே உத்திரவிட்டும் உபரியை வெளியே அனுப்பமறுத்து, ஜனங்கள் உணவு போதாமல் திண்டாடியபோது பங்கிட்டை அமுலுக்குக் கொண்டு வர மறுத்து கிராதகத்தனம் செய்ய மக்களைச் சுரண்டும் காதகர் இந்த யூனியனிஸ்டுகள். இந்த காதகர்களின் அரசாங்கத்தை தேசபக்தர் ரெங்கா 7-1-45ல் அல்லூரியில் ஜனங்களின் அரசாங்கம் என்று குறிப்பிடுகிறார். ஏனென்றால், மூட்டை ஒன்றுக்கு ரூ. 3-8-0 பெற்றுக்கொடுத்ததாம் கிஸானுக்கு இந்த அரசாங்கம்! ஆனால், ஆந்திராவின் ஆலோசகர் அரசாங்கம் இதைச் செய்யவில்லையாம். காங்கிரஸ்காரர்களோ, வீரர்களோ இல்லாத ஒரு

அரசாங்கத்தை ஒரு பொதுஜன அரசாங்கம் என்று கூறுகிறார் ரெங்கா. கிசார் ஹயத்கானும், சோட்டுராமும் அதிகாரவர்க்கத்தினருடைய, நிலச்சுவான்களுடைய பிரதிநிதிகள் என்பது அவருக்குத் தெரியாதா? அதனால்தான் காங்கிரஸ் அசெம்பிளி அங்கத்தினர்களை அசெம்பிளிக் கூட்டங்களுக்கு வராமல் தடுத்து வைத்திருந்தார்கள் என்பது இவருக்குத் தெரியாதா? அதனால்தான் அங்கே காங்கிரஸ்காரர்கள், கம்யூனிஸ்டுகள், லீகர்கள் எல்லோரும் சேர்ந்து அந்தக் கட்சியை எதிர்க்கிறார்கள். அங்குள்ள காங்கிரஸ்காரர்கள் யூனியனிஸ்டு மந்திரிசபையை ஜமீன்தார் மந்திரிசபை என்கிறார்கள். நமது ரெங்காவோ அதை பொதுஜன மந்திரி சபை என்கிறார். இதைவிடத் தேர்ந்த பொய் இருக்கமுடியுமா? ஜனங்களிடம் பொய் சொல்லி ஏமாற்றுவதென்பது ரெங்காவின் தினசரி வேலையாகிவிட்டது.

## வங்காளப் பஞ்சம்: ரெங்காவின் வியாக்கியானம்

குடிவாடாவில் அவர் பேசியபோது "வங்கத்தில் 75 லக்ஷம் ஜனங்கள் மடிந்தது அரிசி இல்லாத காரணத்தால் அல்ல. ஆனால் அரசாங்கம் அரிசியை மறைத்துவைத்து பங்கீடுச் சீட்டுகளை மாத்திரம் ஜனங்களிடம் வீசி எறிந்தது, என்று குறிப்பிடுகிறார். வங்கப்பஞ்சத்துக்கு உண்மையான காரணம் அதிகாரவர்க்கத்தின் பொறுப்பற்ற தன்மையும், கள்ளமார்க்கெட்டுக்காரர்கள் தானியங்களை சேமித்து மறைத்ததும்தான். கள்ளமார்க்கெட் தவிர வேறு மார்க்கெட் இடையாது என்ற நிலைமை ஏற்பட்டதால் மூட்டை அரிசி ரூ. 100 வரையில் விற்பனையானது. இந்திய ஊழியர் சங்க ரிபோர்ட்டும், காங்கிரஸ்காரர்களும், இதர தேசபக்தர்களும் இந்தப் பஞ்சம் மனிதனால் சிருஷ்டிக்கப்பட்டது. சிருஷ்டித்த மனிதர்கள் கள்ளமார்க்கெட் காதகர்கள், கள்ளமார்க்கெட்காரன் அரிசி பூராவையும் சேமிப்பதற்கு அரசாங்கந்தான் இடங்கொடுத்துவிட்டது என்பதை ஒப்புக்கொண்டு ஊர்ஜிதம் செய்திருக்கிறார்கள். ரெங்காவோ கள்ளமார்க்கெட்காரனைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்கிறாரில்லை; ஆனால் கவர்மெண்டுதான் அரிசியை சேமித்துவிட்டது என்று மாத்திரம் கூறுகிறார். யார் கூறினபோதிலும் சரி; அவர் அதை ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை. இதிலிருந்து ரெங்காவின் உண்மைக் குணம் என்ன என்பது தெளிவாகத் தெரியும். நாங்கள் எல்லா சகோதர காங்கிரஸ்காரர்களையும், சகல கிஸான்களையும், இதர தேசபக்தர்களையும் இந்த மேதாவியின் சந்தர்ப்பவாதத்தை அம்பலப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ரெங்கா கூறுகிறார்: "நெல்லுடன் கோதுமை போட்டிபோடுகிறதென்று."

முதலில் பங்கீடே கூடாதென்று கூறினர் ரெங்கா. பிறகு கள்ளமார்க்கெட் விலையளவு நெல் விலை உயர்த்தப்படவேண்டு மென்றார். பிறகு மூட்டை ரூ. 12 ஆக நிர்ணயிக்கப்படவேண்டு மென்றார். இப்போதோ கிஸானின் நெல்லுக்கு நல்ல விலையும், தேசமக்களுக்கு மலிவான விலைக்கு தானியமும் வேண்டுமென் கிறார்.

உண்மையாகவே இவர் அவைகளை எல்லாம் கூறுகிறாரா? இன்று 80 லக்ஷம் ஜனங்களுக்கு ஆறில் ஒருபகுதி பங்கீடு கோதுமைத் தானியம் கொடுக்கப்படுகிறது. இதையும் குறைகூற முன்வந்துவிட்டார். ஜனங்களுக்கு கோதுமை மலிவான விலைக் குக் கிடைக்கிறதே என்று குறைகூறுகிறாரா?

நமது மாகாணத்தின் நிலைமை என்ன? நமக்குப் போதுமான அளவு நெல் இங்கே உற்பத்தியாகிறதா? இந்தப் போதாத மிச் சப் பகுதியை எப்படிப் பூர்த்திசெய்வது? இந்தப் பிரச்சினைகளை நாம் தீர்த்தாகவேண்டும். மத்திய மாகாணத்திலிருந்து கொஞ்சம் இறக்குமதிசெய்யப்படுவதைத் தவிர வேறு எந்த மாகாணத்தி னின்றும் நமக்கு அரிசி எங்கிருந்தும் கிடைக்காது. ஆகவே கோதுமை இறக்குமதி அவசியமாகிறது. போஷிப்பிலும் கோதுமையை வேண்டாமென்று கிடைக்காத மலிவான அரிசி வேண்டுமென்கிறார். இதிலுள்ள புத்திசாலித்தனந்தான் என்ன? அதுவுமின்றி கவர்ன்மெண்டு நெல்லுற்பத்தியை அழிப்பதற்காகத் தான் கோதுமையை இறக்குமதி செய்து மலிவாக விற்பனை செய் வதாகத் தோன்றுகிறது என்று கூறுகிறார். இதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? தேசத்தில் நெல் உற்பத்தி குறைவாயிருப் பதால் கோதுமை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டுமென்று இவரே கோரவில்லையா? விசாகை, கேரளா, கோயம்புத்தூர் முதலிய இடங்களுக்குப் பங்கீட்டின் பிரகாரமே வேண்டிய தானியம் கிடைக்காததால் நமது மாகாணத்துக்கு அரி சியோ, கோதுமையோ தேவையாயிருக்கிறது. ரெங்காவே விசா கையில் பங்கீட்டை அதிகப்படுத்தவேண்டுமென்று கோரியிருக் கிறார். பிறகு கோதுமையினால் அரிசி விலை குறைந்து விட்ட தென்றும், கோதுமை நெல்லுடன் போட்டி போடுகிறதென்ற பேச்சு எதற்கு? இம்மாதிரி பேசுவது அபத்தம்.

ரெங்காவின் சுலோகங்களின் பொருளாதார அடிப்படை தான் என்ன? கோதுமை இறக்குமதிகூடாது. விளையும் நெல்லோ போதாது. அதனால் வாங்குபவர்களிடையே போட்டி உயரும் விலை உயரும். கிஸான் லாபமடைவான் எவ்வளவு விசித்திர மான முடிவு! இருப்பைவிடத் தேவை அதிகமானால் எவ்வளவு ஆயிரக்கணக்கான மக்கள் செத்துமடிவார்கள் என்பதை அவ

ரால் புரிந்துகொள்ளமுடியவில்லை. இதனால் லாபமடைபவர்கள் கள்ளமார்க்கெட்காரர்கள்தான். நெல்விளைவு போதாததால்தான் கோதுமையை இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. ரெங்காவின் பிரச்சாரம் ஏற்கனவே கோதுமை சாப்பிடப் பிடிக்காமிருப்பவர்களிடம் விஷமம் செய்வதைப்போலாகிறது. நாம் அவர்களை கோதுமை சாப்பிடவேண்டியதின் அவசியத்தையும் பங்கீட்டின் அவசியத்தையும் சொல்லி ஒப்புக்கொள்ளச் செய்தாகவேண்டும். நெல் விலை குறைந்ததற்குக் காரணம் அரசாங்கம் விலைவாசிகளைக் கட்டுப்பாடு செய்யாததாலும், தானே கொள்முதல் செய்யாததாலும், பூரா மார்க்கெட்டையும் சேமிப்பாளர்கள் கைப்பற்றிக்கொள்ள விட்டுவிட்டதாலும்தான். கோதுமையினால் நெல் விலை குறைந்துவிட்டது என்ற தப்புப் பிரச்சாரத்துக்கு மக்கள் செவிசாய்க்கக்கூடாது.

அரசாங்கம் கட்டுப்பாடு செய்யாமல் மார்க்கெட்டை எதேச்சையாக விட்டதினால் நெல்விலை குறைந்துவிட்டது. அதன் காரணமாக லக்ஷக்கணக்கான டன் நெல் மில் சொந்தக்காரர்களிடம் சிக்கிக் கிடக்கிறது. சேமிப்பினால் என்ன ஏற்படுமென்பதை வங்கப் பஞ்சத்தின் மூலம் நாம் அறிவோம். ஆகவே, போதுமான தானியத்தைக் கொள்முதல் செய்யும்படியும், மூட்டை ஒன்றுக்கு ரூ. 11 விலை நிர்ணயம் செய்யும்படியும், சரியான பங்கிட்டை அமுலுக்குக் கொணரும்படியும் அரசாங்கத்தை வற்புறுத்தவேண்டும். இதன் மூலம்தான் கிஸான்களுக்கு சரியான விலையும், வாங்குபவர்களுக்கு மலிவான தான்யமும் கிடைக்கச் செய்யமுடியுமே தவிர ரெங்காவின் கோணல் திட்டங்களாலல்ல.

## முடிவு

பொருளாதாரத் துறையிலும், ராஜீயத்துறையிலும் ரெங்காவின் சந்தர்ப்பவாதத்தைப் புரிந்துகொண்டோம். ரெங்காவின் அரசியல் வெற்றிபெறுவதென்றால் நமது தேசபக்தர்கள் கட்டிய பொதுஜன இயக்கங்களனைத்தும் சின்னபின்னமாகி தேசிய இயக்கமே பலஹீனப்படுவதென்பதுதான் அதன் முடிவு. உலகம் பூராவும் மக்கள் தங்களின் உள்நாட்டு ஐக்கியத்தால் மேலே வந்து முன்னேறிக்கொண்டிருக்கும்போது, நாம் மாத்திரம் உள்நாட்டு வேற்றுமைக்கு இடம்கொடுத்து, நமது எதிரியை வீழ்த்தக் கிடைத்திருக்கும் இச்சந்தர்ப்பதை இழக்கப் போகிறோமா? இந்த சந்தர்ப்பவாதி ரெங்காவும், பிளவுவாதி காளேஸ்வரராவும் தேசத்தின் ஒற்றுமையைக் குலைக்கும் துரோகச் செயலைசெய்வதற்கு இடம் கொடுத்துவிடக்கூடாதென்று தேசபக்தர்களையும், பொதுஜனங்களையும் கேட்டுக்கொள்கிறோம். அகில இந்திய கிஸான் சபை

போன்ற தேசபக்திவாய்ந்த பொதுஜன ஸ்தாபனங்களிலுள்ள எல்லா ஜனங்களையும் அணைத்துக்கொள்வதின் மூலம் ஜனங்களின் மகத்தான ஒற்றுமையை சிருஷ்டித்து ஜனங்கள் முன்னிருக்கும் பிரச்சினைகளை நாம் தீர்த்தாகவேண்டும். ஐக்கியமாக நாம் போராடி நீர்ப்பாசனத் திட்டங்கள், விவசாயக் கருவிகள், பெறுவோம். வாய்க்கால்கள் வெட்டுவோம். ஒழுங்கான கொள்முதலையும் கட்டுப்பாட்டையும் அமுலுக்குக் கொண்டுவருவோம். ஜனங்களுக்காக உணவைப் பெருக்கி தேசத்தை முன்னேற்றுவோம். தேசிய அரசாங்கத்துக்கும் நாம் ஒன்றுபட்டுப் போராடுவோம். இந்த உரிமைகளை வெற்றியுடன் நாம் பெறுவதற்குரிய ஒரே மார்க்கம் ரெங்கா, காளேஸ்வர ராவ் போன்றவர்களுக்கு ஆந்திர அரசியல் அரங்கத்தில் இடமில்லாமல் செய்வதுதான். இந்தக் கடமையில் எல்லா ஜனங்களும் பங்கெடுத்துக்கொள்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

W.216 N23
N45
TAMIL NADU ARCHIVES LIBRARY
112546